ஞாயிறு வெளியீடு ஆண்டு சந்தா ரூ. 5 தனிப்பிரதி [illegible] REGD. No. M. 4842

# திராவிடநாடு

மலர் 4 | காஞ்சிபுரம் 13—1—1946 | இதழ் 39

## சின்னத் தலை என்று ஏன் சொன்னார்கள்?

—(கைவல்யம்)—

அண்ணா! வாருங்கள்; கோபமாகவும் வருத்தமாகவும் ஏன் இருக்கிறீர்கள்? உங்களை எல்லாம் சின்னத்தலை என்றுசொல்லிவிட்டார்களே, அதனாலா? உங்களையெல்லாம்பெரியதலைஎன்று எப்பொழுதாவதுசொல்லியிருக்கிறார்களா? பெரியதலையாக இருப்பதைச் சின்னத்தலை என்று சொன்னால் வருத்தப்படலாம். அவர்களுக்கெல்லாம் பெரிய தலையும் நமக்கெல்லாம் சின்னத்தலையுமாகக் கடவுளேபடைத்துப் பிறவியிலேயே அமைத்து, இருகூட்டத்தாரையும் இங்கே அனுப்பியிருக்கிறார். அவர்தான் இருசாராருக்கும் கடவுள். [illegible] வேத—ஆகம—சாத்திர—இதிகாச—புராணங்களின்படியே நடக்கிறோம். வேதசாத்திரங்களில் சின்னத்தலை பெரிய தலை என்பதைச் செம்மையாக விளக்கியிருக்கிறது. அதன்படியே நித்தியகர்ம ஆச்சார அனுஷ்டானபூசை ஆராதனை தான தருமங்கள் எல்லாம் நடந்துவருகின்றன. இருசாராரும் அவை அனைத்தையும் ஒத்து நடத்தியும்வருகிறோம். அப்படியிருக்க இராசகோபாலாச்சாரியாரின் சார்பான 'கல்கி'ப் பத்திரிகை உங்களை எல்லாம் சின்னத்தலை என்று சொல்லிவிட்டால், அதில் வருத்தமென்ன? கோபிக்க என்ன நியாயம் இருக்கிறது? 'கல்கி' பெரியதலையைச்சேர்ந்ததல்லவா? அவர், ஏட்டிலும், ஏற்பாட்டிலும், அனுபோகத்திலும் எதைப்பார்க்கிறார் தினமும்; நம்முடைய சின்னத்தலையைத்தானே! 'கல்கி' நம்மை எல்லாம் சின்னத்தலையாகப்பார்த்து, நினைத்துப் பழகின பரம்பரை. அதோடு, பெரிய தலை என்கிற ஆணவமும், ஆங்கிலேய நாகரிகத்திமிரும் முன்னால் நின்றால், நம்மை எல்லாம் சின்னத்தலை என்று சொன்னதில் அதிசயம் ஒன்றுமில்லை. கடவுளிலிருந்து பரிச்சாரகன் வரையிலும் நமக்கெல்லாம் சின்னத்தலை என்றுகாட்டினார்கள்-காட்டுகிறார்கள்—சொன்னார்கள்—சொல்லுகிறார்கள்—செய்தார்கள்—செய்கிறார்கள். அதிலிருந்தெல்லாம் நமக்கு உணர்ச்சியும் வரவில்லை, ஆலோசனையும் உண்டாகவில்லை. அவ்வளவு கேடுகெட்ட சின்னத்தலையாக இருந்ததால், பள்ளிப்பிள்ளைகளுக்குப் படம்போட்டுப்படிப்பிப்பதைப்போலப்படம்போட்டுக் காட்டினார்கள். அதில் என்னகுற்றம்? சின்னத்தலையிலும்குற்றமில்லை. அதைச் சொன்னதிலும் குற்றமில்லை. சின்னத்தலைக்கு மானம்—உணர்ச்சிவந்து சீர்படுத்திக்கொள்ளாததே குற்றம். சின்னத்தலைஎன்பதன் பொருள்எல்லாருக்கும்தெரிகிறது. அதன்பொருள், மானம்—உணர்ச்சி—மரியாதை முதலியவைகளுடன் கலந்திருக்க வேண்டும். சின்னத்தலை என்றால், அறிவில்லாதவன்—ஆலோசனை யற்றவன் என்பதே பொருள். இதேபொருள்தான் சூத்திரன் என்பதற்கும்.

இதைச்சுயமரியாதைக்காரர்கள் விபரமாகச் சொன்னார்கள். இப்பொழுதும் சொல்லுகிறார்கள். நம்மில் அநேகர் கேட்கவில்லை. பலர் பெரியதலைக்காரர்களுடன் சேர்ந்துகொண்டு பரிகாசம் செய்தார்கள். சிலர் தேசியம்தான்முக்கியம்; சின்னத்தலை சமுதாயம், மற்றவிஷயங்கள் எல்லாம் முக்கியமல்ல; பின்னால் பார்த்துக்கொள்ளலாம் என்றார்கள். தேசியத்திற்குப்போய்ச் சுயராச்சியப்பாதை நெருங்கி வருகையில்கூடச், சின்னத்தலைஎன்கிற பட்டம் போகவில்லை. இப்பொழுதுள்ள தேசியம், இனிவரப்போகும் தேசியத்தில்கூட சின்னத்தலை பெரிய தலை என்கிற பட்டத்தை வைத்திருக்கவேண்டுமென்றே நினைக்கிறார்கள். நான் சொல்வதை ஆலோசித்துப் பார் அண்ணா; இராசகோபாலாச்சாரியார் ஏன் பாரதஉரை எழுதுகிறார்? அண்ணனும் தம்பியுமான இரண்டு இராசாக்கள் சூதாடினார்கள். ஒரு இராசா இராச்சியத்தைத் தோற்றதுமல்லாமல், தன்பெண்சாதியையும் தோற்றான். ஜெயித்த இராசா தோற்றவனுடைய பெண்சாதியைச்சபைக்கு இழுத்துவந்து அவளைக் கேவலப்படுத்தத் துகிலுரித்தான். கிருஷ்ணன் தன்கடவுட் சக்தியால் அவளுடைய மானத்தைக் காத்தான். பின் சண்டைவந்தது. சண்டைபோட்டுச் செத்தார்கள். பிழைத்த பஞ்சபாண்டவர்கள் கால் நடையாகவே வைகுந்தம் போனார்கள். இந்தக் கதையால் நாம்தெரியவேண்டியதென்ன? இக்கதைபெரியதலைசின்னத்தலையை நிலைநிறுத்தினதேயல்லாமல், வேறு என்ன நன்மையைச் செய்திருக்கிறது? இந்தக்காலத்தில்இராசாக்கள் சூதாடி இராச்சியத்தைத்தோற்க முடியுமா? ஒருஇராசா இன்னொரு இராசாவின்பெண்சாதியைச் சபைக்கிழுத்து அவளுடைய துகிலுரிய [illegible]ப்பானா! முடியுமா! நடக்குமா? நடந்துதான்வைகுந்தம்போவதெப்படி? கிருஷ்ணன்என்கிற பகவானை நம்பினால், எல்லா நன்மையும் செய்து, ஒருபெண்ணின் துகிலைப் பகிரங்கமாகஉரிவதுபோன்றகொடுமைகளையும் தடுப்பார் என்கிறார்கள். நமது நாட்டில் பலகாலமாகப் பல படைஎடுப்புகள் உண்டாகியிருக்கின்றன. அவற்றில் பல பெண்கள் பட்ட கஷ்டம் சொல்லமுடியாது. காப்பாற்றின ஒரு பகவானையோ கிருஷ்ணனையோ காணோம். [illegible] தேசம் இருக்கட்டும்; விஜயநகரம் மதுரை, தஞ்சாவூர்முதலியஇராச்சியங்கள் கிருஷ்ணபகவானையேநம்பியிருந்தவைகள்தான். இப்போது அவர்களின் அடிசுவடு இல்லை. அவர்கள் கட்டின கோயில்கள் இருக்கின்றன. வடைக்கும் பொங்கலுக்கும் குறைவுமில்லை. இராசகோபாலாச்சாரியாரோ படித்தவர். ஏன் பாரதத்திற்கு உரை எழுதுகிறார்? பிராமணர்களை வீட்டுக்கு ஒருபிள்ளையாவது வேதஸ்மிருதிகளைப்படிக்கவிடுங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறார். வேதஸ்மிருதிகளில்என்ன இருக்கிறது? சின்னத்தலைபெரியதலை விவகாரங்களேஇருக்கின்றன. இந்து தர்மத்தையும் நமகலைகளையும் காப்பாற்றவேண்டுமென்றுபெரிய தலைவர்களும் சொல்லுகிறார்கள். தமிழை அபிவிருத்தி செய்கிறோமென்று காங்கிரஸ்காரர்களும்புராணத்தைப்பிரசங்கம்செய்கிறார்கள். பணம் கொடுத்துப்பண்டிதர்களைக் கொண்டும்சொல்லவைக்கிறார்கள். கிராமங்கள்தோறும்போய்ப் புராணப் பிரசங்கங்கள் செய்யுங்கள் என்று பதினைந்து வருடங்களுக்கு முன் காங்கிரஸ்பேடையிலே கலியாணசுந்தர முதலியார் சொன்னார். பெரிய தலையின் கையாள்களில் முதல் ஆளான இந்தச் சின்னத்தலைப் பண்டிதர் சொன்னபடியே இன்றும்நடக்கிறது. இந்து தருமமென்றால் ஸ்மிருதிகளின் விதிகள். இந்துக் கலைகள்என்றால் இதிகாச புராணங்களைகப்புவது. இதையெல்லாம் பார்க்கையில் எந்தத் தேசிய இராச்சியத்திலும் நம் தலைகள் சின்னத்தலைகளாகவே இருக்க

(7-ம் பக்கம் பார்க்க)

## கலைஞருக் கருணை!

### இன்பம் பொங்கும் இந்நாளில்

நமது மனதிலே

### துன்பம் குடையும் நிலையில் உள்ளோம்

### பாகவதர் - கிருஷ்ணன்

### சிறைவாசத்தால்.

**தமிழகம், கலைஞருக்குக் கருணைகாட்டும்படி வேண்டுகிறது!**

**எங்கும், எல்லாக் கட்சியினரும் கூடிக் கேட்கின்றனர்.**

துறையூர் [illegible]ல் 28-12-45ல் கலைஞருக்குக் கருணைகாட்டும்படி தீர்மானம் ஏகமனதாகநிறைவேறியது.

நாகையில்: நகராண்மைக்கழகத்தலைவர் திரு. திருவம்பலச் செட்டியார் தலைமையில் 3-1-46ல் எல்லாக்கட்சிகளின் சார்பிலும், இருபத்துமூன்று கழகங்களின் ஆதரவிலும், விடுதலை கோரிக்கூட்டம் நடைபெற்றது.

சென்னையில்: மெமோரியல் மண்டபத்தில், எல்லாக்கட்சியினரும் கொண்ட கூட்டம்,

மாஜி மேயர் திரு. எம். இராதாகிருஷ்ண பிள்ளை

அவர்கள் தலைமையில்

20-1-46ல் நடைபெறும்என்று தோழர்கள் வி.எம். இராமசாமி, எம்.ஏ; பி.எல்; ஆர். மதனகோபால், பி.ஏ; பி.எல்; கே. சுப்பிரமணியம், பி.ஏ; பி.எல்; பி. இராஜேஸ்வரன், பி.ஏ; பி.எல்; டி. ஆர். இராசகோபால், பி.ஏ; பி.எல்; டாக்டர் யு. எல். நாராயணராவ், வி. எம். கடிகாசலம், இந்திராணிபாலசுப்பிரமணியம், டி. எம். தெய்வசிகாமணி ஆகியவர்கள் அறிவிக்கின்றனர்.

தூத்துக்குடி முனிசிபல் கௌன்சில்: 28-12-45ந்தேதி கூட்டத்தில் பி. வி. பொன்னுசாமி நாடார் அவர்களால் டி தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேறியது.

புதுப்பாளையம் பஞ்சாயத்துபோர்டு: 30-12-45 கூட்டத்தில் தோழர் அண்ணாமலை ஆச்சாரி அவர்களால் டி தீர்மானம் பிரேரேபிக்கப்பட்டு நிறைவேறியது.

**சிறையிலே செந்தமிழ் மணிகள்!**

**வெளியே நாம்!**

**இன்பம், உள்ளே, காவலில்!**

துன்புற்ற தமிழகம் துரைத்தனத்தாரை

### கருணை காட்டுக

என்று

**வேண்டுகிறது!**

## இசைபொங்க, இனிமைபொங்க, கலைஞர்விடுதலைகோருமின்.

# ஆச்சாரியாருக்கு அர்ச்சனை!

## பக்த கோடிகளின் புது நைவேத்தியம்.

## எதிர்காலம் இருண்டுவிடுமோ?

(சிறைபுகுந்தோன்)

நான் ஓர் மாஜி கைதி! ஆச்சாரியார் மாஜி முதன்மந்திரி! அவர் மந்திரியான பலன்,நானும்என்னுடன் ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்களும் சிறை புகுந்தோம், இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே. இன்று நானும் சிறையில் இல்லை, என்னைச் சிறைச்சாலைக்கு அனுப்பிய ஆச்சாரியாரும் மந்திரிப்பதவியில் இல்லை; ஆனால் நான் எந்த இலட்சியத்துக்காகப் போராடினேனோ அது வளர்ந்து தமிழகத்திலேயேபுதுமணம்பரவும்படிச்செய்துவிட்டது. இந்தி, வடநாட்டுமொழி அதுவேண்டாம்என்று நாங்கள் கிளர்ச்சி செய்தோம், இன்று, மொழிமட்டுமல்ல,வடநாட்டாரின் எந்தவழியும் நமக்கு வேண்டாம், வடநாட்டு ஆதிக்கமே கூடாது, திராவிடம் தனிஅரசு ஆகவேண்டும் என்று முழக்கமிடும் நிலையைக் காண்கிறேன். புகுந்தது சிறைஆனல் அதுதந்ததோசெல்வம் என்று களிக்கிறேன்; அதுபோன்ற களிப்பு, அன்று களிகண்டு கலங்கிய நண்பர்களுக்கு, இன்று ஏற்பட்டு, நாம் வீணுக்குழைக்கவில்லை, விழலுக்கு நீர்பாய்ச்சவில்லை, மொழிப்போர், இனஅரசு அமைக்கும்இறுதிப்போராகிவிட்டது, இதற்கான பணிபுரிவோம்என்றஇன்பம்கலந்த உறுதியை அளித்துவிட்டது. சிறைபுகுந்த நாங்கள், இன்றுசீர்பட்டுக்கொண்டிருக்கும் திருஇடத்திலே வாழ்கிறோம், ஆகவேமகிழ்கிறோம்.

எங்களைச்சிறை போகச்செய்த சீலரின்நிலையோ, பாபம், தலைகீழாக மாறிவிட்டது.ஆச்சாரியார் தமிழரைச் சிறையில் தள்ளியபோதும், தமிழர்தலைவர்களைக் கேலிசெய்தபோதும்,தாலமுத்துநடராஜன்பிணமானதற்காகச் சிரித்தபோதும்,கிரிமினல் திருத்தச் சட்டத்தைஉபயோகித்தபோதும்,சீராளா சித்தவலசா மதுரை ஆகிய இடங்களிலே தொழிலாளர்களின் கிளர்ச்சியைத்தடி அடிதந்து அடக்கியபோதும், அசையாது அவருடன் இருந்தனர், தமிழ் காங்கிரசார்சிலபலர், சட்டசபையினர். தமது இனத்தவரை இழிவுபடுத்தும் ஆச்சாரியாரின்போக்கை இவர்கள் ஏங்கனம் பார்த்துச்சகித்துக் கொள்ளுகிருர்கள்? எப்படி இவர்களின் மனம் இடந்தருகிறது என்றுநான், சிறையிலே கிடக்கையில் சிந்தித்ததுண்டு!சிரித்ததும்ண்டு!ஏன்சிரிப்பு என்பீர்? இந்தஆச்சாரியாரை, இன்று தூக்கித்தலைமேலேவைத்துக்கொண்டாடுகிருர்கள், ஆச்சாரியார் திருஅடிகளே சரணம்என்பதன்றி வேருேர் அரசியல்தத்துவம்அறியாததாசர்களாகஇருக்கின்றனர், இதனல் ஏற்படப்போகும் விளைவுகளை அறியாமல்! ஒருகாலம்வரும்விரைந்தும்வரும், தூக்கித்திரிவோர் தாக்கித்தீர வேண்டிய அளவுக்கு ஆச்சாரியாரின்போக்கு மாறும், அந்த நேரத்தில் சொந்த இனத்தவரையே நிந்தனை செய்யும் இந்தத்தோழர்கள், இன்று எந்த ஆச்சாரியாரை ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே என்றுசிந்துபாடுகிருர்களோ, அதே ஆச்சாரியாரைத், தமிழருக்குத் துரோகி—பதவிப்பிரியர்—சர்வாதிகாரப்போக்கினர் — சூழ்ச்சிக்காரர்—என்றெல்லாம்ஏசத்தான்போகிருர்கள், எந்த ஆச்சாரியாரை இன்று சீடகோடிகள் பூஜிக்கின்றனவோ, அதே ஆச்சாரியாரை அதே சீடகோடிகள், ஏசப்போகின்றன, என்று எண்ணியே நான் சிரித்தது. அது வீண்கனவாகவில்லை. இதோ, ஆச்சாரியார்— காமராஜர் தகருரின்போது,அவருடைய பக்த விஜயத்திற்காகவே நடத்தப்படும் ஏடுகளாக இருந்தவைகள் அளிக்கும் அர்ச்சனை — காட்டும் புதுநைவேத்தியம்! அணைபோட்டுத் தடுத்துவைக்கப்பட்டிருந்த வெள்ளம்அணை உடைபட்டதும், பாய்ந்தோடிவருவதுபோலக்;கூண்டிலே கிடந்த வேங்கை, கம்பிஉடைபட்டதால் வெளியேறியதுபோல, அடக்கிவைத்திருந்த உணர்ச்சிகளை, ஆச்சாரியார் ஆட்சியின்போது அவரடியார்களாக இருந்து வந்தவர்கள், ஏவும்காட்சியைக்காணலாம்.

திருவாரூர் 'நவ இந்தியா' 'ஆச்சாரியாரைப்பற்றி இச்சமயத்தில் இன்னென்று விஷயத்தையும் ஞாபகப் படுத்துகிருேம். அது என்னவென்ருல், சில வருஷங்களுக்கு முன் காரைக்குடியில் நடந்ததமிழ்நாடுகாங்கிரஸ்கமிட்டித்தலைவர் தேர்தலில், அப்போதும் காங்கிரசிலிருந்து விலகிச் சுகவாஸம் செய்துவந்த ஆச்சாரியார், தமது ஜன்மவிரோதியான சத்தியமூர்த்திக்கு அபயம்அளித்து, காரைக்குடிக்கு விஜயம்செய்து, உயர்திருவாளர் முத்துரங்கமுதலியாரைத் தோற்கடிக்கச் செய்து பெருமைபெற்றதே.

இதற்கு இவர் கையாண்ட முறை, அங்கே வராதிருந்த ஒரு சிலருக்குத்தான் தந்தி கொடுத்தும் ஆட்களையனுப்பியும் வரவழைத்து மூர்த்திக்குப் பலம் தேடிக்கொடுத்ததே.

இந்தநிலைமையினல் இவரது உள்ளக்கிடக்கையைத், தமிழ் நாட்டுப் பிராமணரல்லாதார் அப்போதையைப்போலவேஇப்போதும்நன்குணர்ந்துகொள்ளக்கூடும்.

இது விஷயமாக அரசமயம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டியில் "ராஜகோபாலாச்சாரியாரின் காரைக்குடிச் செய்கை வருங் காலத்தில் தமிழ் நாட்டில், காங்கிரசில் பிராமணர்—பிராமணரல்லாதார் பிரிவினையுணர்ச்சியை உண்டாக்கிவிடுமோ என்று இந்தக்கமிட்டிவருந்துகிறது" என்ற தீர்மானம் செய்திருப்பதையும், இப்போதைய நிலைமையையும், ஒத்திட்டுப் பார்த்தால், அவரது உள்ளக்கிடக்கை இன்னும்மிகத் தெளிவாகாதகாங்கிரஸ் தமிழர்களுக்கும் நன்கு புலனுகும்

அக்காலத்தில் உயர் திருவாளர்களான, ஈ. வெ. ரா. என்ன, டாக்டர் வரதராஜலுநாயுடு என்ன, இவர்கள் செய்த தியாகத்தாலும்சிறந்ததொண்டினலுமே "நெல்லுக்கிறைத்தநீர் புல்லுக்குமாம்" என்றபடி அவர்களோடு தோள்போட்டு நின்றதினல்ஆச்சாரியார் அடைந்த பெருமை என்பதை ஆச்சாரியார்இப்போதும் உணர்வாராக. இவைகளை உணராது ஆச்சாரியார் கோஷ்டியார் வீண் ஆரவாரம் செய்து அற்பத்தனமான பிரசாரம்செய்வதிற்பலனென்ன?" என்றுதிட்டுகிறது.

திருச்சி, "சிவாஜி" பத்திரிகை, "காரியக்கமிட்டியினர் தங்கள் பொறுப்பையும், நிதானத்தையும் இழந்து முறைதவறி நடந்துவிட்டனர். காவடி கோஷ்டியினர் செய்தபுகார் விசாரணை செய்யக்கூடிய அவ்வளவுமுக்யத்வம்வாய்ந்ததா இல்லையா என்பதை அவர்கள் சிந்திக்கவில்லை. ராஜாஜி யோக்கியதைபற்றியும், அவருக்காகச்சென்றிருக்கும் காவடி கோஷ்டியினர் பூர்வீகத்தையும் காரியக்கமிட்டியினர்நன்ருகஅறிவார்கள். அப்படியிருந்தும்அவர்கள் செய்யும்புகார்மீது நடவடிக்கைஎடுக்குமுன், கட்டுத்திட்டப்படிநடந்துவரும்தமிழ்நாட்டுக்காங்கிரஸ் நிர்வாகிகளைப்புகார் விஷயமாகக்கலந்திருக்க வேண்டும். ஆனல் காரியக்கமிட்டியும் அவ்விதம்செய்யாதது புத்திசாலித்தனமாகவும், பொறுப்புள்ளவர்களாகவும் நடந்துகொள்ளவில்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. தெருவில்போகிற சோமாரிகள் வாய்க்குவந்ததை உளறுவார்கள். அவைகளுக்கெல்லாம் செவிசாய்த்து நடவடிக்கை எடுத்துக் கொள்வதென்ருல் காரியக்கமிட்டியின் உயர்வுக்கே மோசம்வரும். அதுமட்டுமல்ல, இந்தமாதிரி சிறியவிஷயங்களுக்கெல்லாம் காரியக்கமிட்டி தலையிடுமெனஏற்பட்டால்,மாகாண காங்கிரஸ்இருக்கவேண்டியஅவசியமேஇல்லாமல் போய்விடும்.

ராஜாஜி கோஷ்டியினர் எதிர்காலம் இருண்டுவிட்டது. அவர்கள் தேசியகாரியங்களில்கலந்து கொள்ளாமல் விலகியிருப்பது தான் நல்லது. மேலும் மேலும் அவர்கள் செய்த முட்டாள்தனமான காரியங்களால் தமிழர்கள் கொதிப்படைந்திருக்கிருர்கள். ஜனப் ஆஸாப் அலியோ, அல்லது காங்கிரஸ் காரியக்கமிட்டியின் தீர்ப்போ இந்தக் கொதிப்பை அடக்க முடியாது. நில்லுல்லிகளும், பித்தலாட்டங்களும்எவ்வளவுசெய்யமுடியுமோ அந்தனையும்செய்துவிட்டுச், சட்டத்தையும், திட்டத்தையும்காட்டிச் சமாதானப்படுத்தும் நிலையில்தமிழர்கள் இல்லை. ராஜாஜியும், அவரை அண்டிக்கிடக்கும் அவலட்சணங்களும் தமிழ்நாட்டிற்கே ஈடுசெய்யமுடியாத துரோகம் செய்துவிட்டார்கள். தமிழ்மக்களை இழிவுபடுத்திவிட்டார்கள். காரியக்கமிட்டியினர் இதை அறியாமலிருக்கலாம். ஆனல் உள் விஷயத்தைஅறிந்துகொள்ளாமல் கண்மூடித்தனமாக ஏதுசெய்தாலும் அதற்கு மதிப்பில்லாமல் போய்விடும்.

இன்றுள்ளநிலையில்ராஜாஜி தன் கோஷ்டியினர் உள்பட காங்கிரஸுக்குள் புகுந்துகொண்டுஎன்னதான்செய்து சாதித்துவிடப் போகிருர்? ஒரு சிலரைத் தவிர வேறுயாரும் அவரை ஒருகாசுக்குக்கூட மதிக்கப்போவதில்லை. அவரிடம் யாருக்கும் நம்பிக்கையும் ஏற்படாது. புதிய உடையில் பழையதுரோகியாகவே இருந்து வருவார். அவர் பேச்சுகளையும், நடமாட்டங்களையும் இனி துப்பறிந்துதான் வருவார்கள். இவைகளையெல்லாம் சிந்திக்கும்போது ராஜாஜி பேசாமல் அரசியல் துறவுகொள்வதுதான் அவருக்குஇகபர சுகமளிக்கும். ஆனல்ராஜாஜி என் யோசனையைப்பா ஏற்பார்!" என்று எழுதுகிறது. இந்த அர்ச்சனைகள் கிடக்கட்டும், ஆச்சாரியார் பட்ட அவஸ்தையை எண்ணினலே, அன்று இந்தி எதிர்ப்பின்போது, நாம் சொன்ன வாசகத்தின் உண்மைஇன்றுநன்கு விளங்கும். "ஆச்சாரியாரே! அரசியல் அதிகாரம் எனும் மதுஅருந்துகிறீர், ஜாக்ரதை, போதை ஏறுகிறது" என்று எச்சரித்ததை, வெறும் ஏளனம் என்றே அவரும் அவர் போன்ருரும் எண்ணினர். இன்று! "அரசியல் அதிகாரம் என்பது ஓர் மணல்மேடு; உயர உயரப்போகப் போக ஒருஅடி தவறினலும் சரிந்து கீழே வ த்தான்வேண்டும்" என்று அன்றுசொன்னதைத் தூற்றலென்றுஎண்ணினர்தத்துவவிளக்கம்என்றுஉணராமல். இன்று, அவர் "சரிந்தார்," நல்லவேளையாக, அசப்அலி அளித்த ஊன்றுகோலால், நடமாடமுடிகிறது! ஆனல், பரிதாபம், எந்தவிதமான நடமாட்டம்! முன்னல் இருவர்வழி அமைக்க, கூடே சிலர் வட்டம் கட்ட, படமும் நகைச்சுவையும் தீட்டும் ஓவியக்காரர் உடன்வர, பவனிக்கு நாள் நேரம் பார்த்துச், சகுனம் பார்த்துப்புறப்பட்டுப் போக வேண்டி நேரிட்டு விட்டது. ஆச்சாரியார், இத்தனை ஆண்டு பொதுவாழ்வுக்குப்பிறகு, அதிலும் பலமான பிரச்சாரயந்திரபலம்கொண்ட ஒருகட்சியின் வேலைக்கும்பிறகு, இந்தப் "பூணரம் பூணவேண்டிய" நிலை பெற்ருர் என்ருல், "வீணுக்குழைத்தேனடா, தோழனே! விபரீதம் கண்டேனடா!" என்று பாடவேண்டியன்ருே நேரிடுகிறது. அவர் செல்லும்வழி, "கண்ணன் காட்டியது." அது அவரைக்கொண்டு சேர்த்த இடமோ, நண்பர்கள் தரும் இடி, சீடர்கள் தரும் ஏசல், சகாக்கள் தரும் வசைவு என்பனவைகளைப் பெறும் விசித்திரபுரி.

வடாற்காடு வட்டாரத்திலேதிருவத்திபுரத்திலே சென்ற கிழமை சென்ருர் ஆச்சாரியார், கண்டஇடமெங்கும் கருப்புக்கொடிபறந்தன, அவரை மீண்டும் "கனம்" ஆகும்படி, கட்டியக்காரர் சிலர் கேட்டனராம், அதுபோது அவர் சொன்ஞராம், "அரசியல் அதிகாரமா? ஐயனே! அது நெருப்பு. முன்பு தொட்டேன், அவதிப்பட்டேன். இன்று ஊரிலேநான்கண்ட கருப்புக்கொடிகளெல்லாம், அந்த நெருப்பின் விளைவுகளே!" என்று. எவ்வளவு உண்மை! எவ்வளவுமனம் கசிந்திருக்கிறது!! இந்நிலையில் அவரும், மொழிப்போர் இனப்போராக மாறும் நிலையில் திராவிடரும் இருக்கக் காணும்போது, அன்று சிறைபுகுந்தோர் இன்று களிப்படையாது இருப்பரோ! களிப்பு மட்டுமா, கொடுமுடிக் கோகிலம் கூவிய கீதங்கூடத்தான் ஒலிக்கிறது, "சிறைச்சாலை என்ன செய்யும்!" என்று.

தந்தி: "புருமார்க்" திருச்சி.


# பணத்தோட்டம்

C. N. A.

"ஒரு ஆயிரம் ரூபாய்மட்டும் என்னிடம் இருந்தால்..........?"

"இருந்தால்..........?"

"ஒன்பது ஆயிரமாகும் ஒரு மாதத்தில்!"

"பணத்தை முளைக்கவைக்கிறாயா?"

"பைத்யக்காரா! பணம் முளைப்பது கிடையாதா? உனக்குத்தெரியாது, மற்ற எல்லாத் தோட்டங்களையும்விட, அதிக பலன் தருவது "பணத்தோட்டம்" ஒரு போகம்இருபோகமல்ல,பலமுறைஉண்டு விளைவு! விதைதூவிவிட்டு, காலம் என்ற நீரைப்பாய்ச்சிச் சட்டம் என்றவேலியை அமைத்து, அஜாக்ரதை என்ற களையைப்பறித்துவிட்டுப்பார், அந்தத்தோட்டத்தின் விளைவுபோல, வேறு எந்தத் தோட்டத்திலும் கிடைக்காது, ஆயிரம் ஆறு ஆயிரமாகும், பிறகு அதுவேபத்துமாகும்"

"எப்படி?"

"எப்படி என்று எனக்குத் தெரியும், என்னிடமோ பணம் இல்லை—உனக்குத் தெரியாது, ஆனால் பணம் இருக்கிறது"

★

ஊரிலே, பொருள்கிடைக்காது, பலவிதமான "திட்டங்களை" மட்டும்வைத்துக்கொண்டுள்ளவர்களுக்கும், பணம் படைத்தோருக்கும் இடையேஇதுபோல் உரையாடல் நடக்கும். இதிலே தொக்கி நிற்கும் ஓர் உண்மை என்னவென்றால், பணம் தொழில்நடத்தத்தேவை, ஆனால் கிடைக்கவில்லை என்பது. பணம்தேவை தொழில்நடத்த,இலாபகாமானதொழில் நடத்த, முதலாகப்போடும் தொகையைப் பன்மடங்காக்கும் அளவு இலாபம் வரக்கூடிய தொழில்நடத்த, என்றுகூறுபவர் ஒருபுறம் உள்ளனர். மற்றோர்புறமோ, பணம் இருக்கிறது, தொழில் ஒன்றும் இல்லை, எதைத் தொடங்கினால் என்ன நேருமோ என்றபயம் இருப்பதால், உள்ளது போகாமல் இருந்தால் போதும் என்று இருந்து விடுகிறேன், பாதுகாப் போடுகூடிய தொழிலாக இருந்தால், பணம் போடலாம், எவ்வளவுவேண்டுமானாலும், என்றுகூறுபவர்—தவறு—அவர்கள் கூறுவதுமில்லை—கருதுபவர் உண்டு. இந்த இருசாராருக்கும், சந்திக்கும் இடம் வேண்டும்—ஒரு நாட்டின் பாங்குகள் (Banks) இதற்கான இடங்கள்.

பாங்க்வளர்ச்சி, நாட்டிலே பணமும் மிகுதி, தொழிலும் வளர்கிறது என்பதற்கு அறிகுறி. பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைக்கிறவர்களின் தொகையைக் குறைக்கவும், பாடுபடமுடியும், பலனும்காணமுடியும்,பணம்தானே இல்லை என்றுகூறும் ஆட்களின் பசியை அடக்கவும் பணிபுரிகின்றனபாங்குகள். "இருபதாயிரத்துக்குச் சரக்கு அனுப்புகிறேன்!" என்ற தந்தி கிடைத்ததும்,இரும்புப் பெட்டியைத் திறந்து, எண்ணிக்கொண்டிருப்பதில்லைபணத்தை, இண்டோ-கமர்ஷியலுக்குப் "போன்" செய், இம்பீரியலுக்குப் போய்வா—என்று தொழிலின் முதலாளிகூறும்காலம்இது. எனவே பாங்குகள், பணத்தைப் பயிர் செய்யும் வணிகருக்கு இன்றியமையாத துணையாகின்றன. பாங்க் இல்லாப்பட்டணம் இல்லை என்பது புதுமொழியாகிவிட்டது. ஒரு நாட்டுப் பொருளாதார வளர்ச்சி, இந்தபாங்க் வளர்ச்சியைப் பொறுத்திருக்கிறது.'வட்டிக் கடை' நடத்த நாட்டுக்கோட்டை செட்டிமார் பர்மா போய்விட்டனர், தங்கநகைமீது மட்டுமே கடன் தருவோம் என்று கூறிக்கொண்டு, காப்பும் கொலுசும் போட்டுக் கடைநடத்திய வைசியச்செட்டிமார் இருந்ததும் குறைந்துவிட்டது, இப்போது வட்டிக்கடைகள், "பூட்ஸ்அணிந்த" அதிகாரிகள் தங்கி வேலைசெய்யும் பெரிய ஆபீஸ்களாகிவிட்டன. நாட்டின்பொருள் நிலைஉயர்ந்து விட்டதற்கு இது அறிகுறி.

பொன்னைக் கொடுத்துவிட்டு (கடனுக்குப்பணம் கொடுத்துவிட்டு) மண்ணை (நிலத்தை)வாங்கினேன் என்று புலம்பும் நிலையிலேயும், கடனுக்காக நடந்துநடந்து கால் செருப்புத்தான் தேய்ந்தது என்று கதறும் நிலையும் மாறிவிட்டது, முழுதுமல்ல— ஓரளவுக்கு. பாங்குகள் வளர்ந்ததும், பாதுகாப்புடன் பணத்தைச்சேமித்துவைக்கவும் இடம்கிடைத்தது;கேட்ட நேரத்தில் அதிகத்தொல்லையின்றி, வியாபாரம் செய்ய—தொழில் நடத்தப்பணம் தரும் இடமும் ஏற்பட்டது. எனவே, பணத்தோட்டங்கள், ஏற்பட்டன, மாசுலும் அதிகம். வயலுக்கு, விதை அல்லது 'நாற்று' இருக்கும் இடம்போல, பாங்குகள் உள்ளன. வயலின் நிலை, விதை வைத்திருக்கும் இடத்தானின் தயவைப் பொறுத்திருக்கிறது, தொழிலின் நிலை பாங்க்கின் தயவைப் பொறுத்திருக்கிறது.

★

"கந்தன், நல்லஉழவன்! மழையும்பெய்திருக்கிறது! உழவும் ஆகிவிட்டது. விதை கேட்க ஓடுகிறான் வீரனிடம்; வீரனோ, கந்தனுக்கு வேண்டியவனல்ல, சோமனுக்கு நண்பன். ஆகவே கந்தனுக்கு விதை இல்லை என்று கூறிவிட்டான்; உழுத இடம் உலர்ந்தது, சோமன் வயலில்பயிர் வளர்ந்தது. இதுவேதான் தொழில்விஷயத்திலும். அதிலும் தற்காலத்திலே, தொழில்கள் நடத்தப்பெரும்பொருளும் தேவை, முட்டின்றிப் பொருள்கிடைக்க வேண்டும்; தேவைப்படுகிற நேரத்தில். அதாவது தொழிலின் வளர்ச்சியோ அழிவோ, பாங்க் பூஜாரியின் வரத்தைப் பொறுத்து இருக்கிறது.

★

இதனை நன்கு உணர்ந்து, பயன் பெற்றனர் வடநாட்டார். பணியாக் கூட்டம் இந்தப்பரந்த உபகண்டமெங்கும் பரவி, "பணத்தைக்"கொண்டு, தமது அரசை அமைத்துக்கொண்டனர். பாங்குகளின் முக்யத்துவத்தை நன்கு அறிந்து கொண்டனர், இதுபோது, வடநாட்டிலும் இங்கும் பெரியபெரிய பாங்குகளைத் துவக்கி நடத்துகின்றனர். தொழில் வளர்ச்சிக்கு, "ஜீவநாடி" அவர்களிடம் 'இருக்கிறது' அந்த 'ஜீவநாடிகள்' மேலும் மேலும் அவர்களிடமே போய்ச்சிக்குகின்றன. இனி அவர்கள் வைத்ததுதான் சட்டம், இட்டதுபிச்சை, என்று கூறவேண்டிய நிலைக்கு இந்த வளர்ச்சி இருக்கிறது. திராவிடநாட்டிலே "தொழில் வளர்ச்சி" இல்லை, என்று சென்ற திங்கள் இறுதியிலே சென்னையில்கூடிய தொழில்வளர்ச்சிமாநாட்டார் பேசினர். புதியதொழிற்சாலைகள் ஏற்படவேண்டும், வளம் இருக்கிறது, கொண்டு செலுத்துபவர் முன்வரக்காணோம் என்று மாநாட்டிலேஎடுத்துக்கூறப்பட்டது. உண்மை!ஆனால்முழு உண்மையல்ல! தொழிற்சாலைகள்ஏற்பட வேண்டுமானால், எந்தப்பணபலம்அதற்கு அவசியமோ, அதனைத் திராவிடம் பெற முடியவில்லை, அந்தப்பலம், வடநாட்டவரால் பண்படுத்தப்பட்டுபக்குவமாகஇருக்கிறது. எனவே அவர்களுடன் போட்டியிடத் தென்னாட்டவரால் முடிவதில்லை. துணிந்து துவக்கினாலும் வடநாட்டுப் போட்டி ஏற்பட்டுவிடும் என்றஅச்சமும், அந்தப்போட்டி ஏற்பட்டால், வீண் நஷ்டம் அடைய நேரிடும் என்ற திகிலும் இருக்கிறது. அந்த அச்சம் அர்த்தமற்றது என்று கூறமுடியாது. கப்பலோட்டிய "சிதம்பரம்பிள்ளையை" ஈன்றெடுத்த தமிழகம் தொழில்திறமையை இழந்துவிட முடியாது. ஆனால், அதற்கான சுற்றுச்சார்பு, சூழ்நிலை, கெட்டுக்கிடக்கிறது. எனவேதான் இங்கு பட்டமரம் அதிகமாகவும்,ஒருசில துளிர்களும்மட்டுமேதொழிலுலகில் உள்ளன. எதிர்காலத்தில், புதிய தொழிற்சாலைகள் வளரவேண்டுமானால், பணம் ஏராளமாகவும் தாராளமாகவும் கடனாகத் தேவை. வடநாட்டாரிடம் பெரியபாங்குகளின்சூத்திரக்கயிறுஇருப்பதால், அவர்களால்தான் அந்தஇயந்திரத்தை ஆட்டிவைக்கமுடியும். அவர்கள் விரும்பினால்,எத்தனைதொழிற்சாலைகளையும் துவக்க உதவி செய்யமுடியும், விரும்பாவிட்டால் தடுக்கமுடியும். ஆகவேபுதிய தொழிற்சாலைகள்அமைக்க விரும்புவோர் வடநாட்டவர் நிறுவிநடத்தி வரும் பாங்க்குகளின் தயவை நாடித்தீரவேண்டும். அந்தத்தயவு, இந்நாட்டவருக்குக் கிடைக்குமா, வடநாட்டவருக்குக் கிடைக்குமா, என்று வாதிக்கத்தேவையில்லை, இனம் இனத்தோடுதான் சேரும்.எனவே,இங்கு புதிய தொழில் நடத்த ஒருகாம்சந்துக்கு இருக்கிற அளவு வசதி ஒரு கருப்பண்ணன்செட்டியாருக்குக்கிடையாது. இந்தியாஒருநாடுஎன்றகொள்கையின்படி, ஆட்சிமுறை நடப்பதால்,கருப்பண்ணன் செட்டியார் நாட்டிலே காம்சந்தொழில் நடத்த வருவதைத் தடுக்கமுடியாது—சொந்தநாட்டிலேயே காம் சந்துக்குஇடமளித்துவிட்ட இளித்தவாயர், வடநாட்டிலேயாபோய் தொழில் நடத்துவர்! அவருடைய வாழ்வும், அவர்வாழும்நாட்டின்வாழ்வும் வறண்டு கிடக்கும், மார்வார், குஜராத் மாளிகைகளின் மாடிகள் மேலும் மேலும் உயரமாகும்! இப்படி ஆலாமா' பொருளாதார வளர்ச்சியிலே சமஎடை இல்லாது போகுமே, தென்னாடு வெறும் மார்க்கட்டாகவும், வடநாடு, மான்செஸ்டர், ஷெப்பீல்டு, லங்காஷயர் போன்ற தொழிற்சாலைகள் நிரம்பிச்செல்வம் கொழிக்கும் இடமாகவும் இருந்தால், சீமையிடம் இந்தியா அடிமைப்பட்டது போலத்தானே, வடநாட்டினிடம் தென்னாடு அடிமைப்படும் என்று கேட்டாலோ, யாரய்யா தென்னாட்டிலே தொழிற்சாலைகளை விருத்திசெய்து கொள்ளக்கூடாது என்று தடுத்தார்கள்? என்று கேட்கின்றனர்—கேட்கின்றனரே தவிர, இங்கு தொழில் வளர்ச்சி ஏற்படமுடியாதபடி வடநாட்டாரிடம், பணபலமும், பணத்தைப்பரப்பும்பலமும் சிக்கிஇருக்கிறது என்ற சூக்ஷமத்தை யார்உணருகிறார்கள்? இன்னும் கொஞ்சநாட்களிலே இது விளங்கிவிடும், புத்தம்புதிய தொழிற்சாலைகள், வடநாட்டவரால் திராவிடத்திலே துவக்கப்படும் போது. வடநாட்டவரை அலட்சியம் செய்து இங்கு தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டாலும், விரைவிலே அவை, வடநாட்டாரிடம் சிக்கிவிடப்போவதும்உண்மை. இன்று, வடநாட்டார் பாங்க்துறையை ஆட்சி செய்கின்றனர், இந்த ஆட்சியின்கீழ் எந்தத் தொழிற்சாலையும் சரண்புகுந்தாக வேண்டும். சாதாரணமாகப்பேசிக் கொள்வதில்லையா? "அவனுடன்போட்டியிட முடியுமா? அவனோ சீமான்! அவனுடன் போட்டி போட்டால்அவன்நம்மைப்பணத்தால் அடித்தே கொன்றுவிடுவான்" என்று. அதேநிலை, தென்னாடு—வடநாடு தொடர்பு விஷயத்திலும் இருப்பதைக்கொஞ்சம் சிந்தித்துப்பார்ப்பவர் உணருவர்.

★

பணத்துக்கு இருக்கும் காந்தசக்தி, விசித்திரமானது. அந்தச்சக்தியால்இழுக்கப்படாதபொருளே இல்லை, அரசு—புகழ், எதுவும் அந்தக் காந்தசக்திக்குக் கட்டுப்பட்டுவிடுகிறது. அதுமட்டுமா? பணத்தைப்பணம் இழுக்கிறது அந்தக்காந்தசக்தியால். பணம் இருக்கிறஇடத்திலேதான் பணம் சேர்கிறது என்று மக்கள் பேசுவதிலே இந்த உண்மை தொக்கியிருக்கிறது. பணபலத்தைக்கொண்டு, மேலும் பணபலத்தை அதிகரிக்கச்செய்யும் சக்தி வடநாட்டுக்கு ஏற்பட்டுவிட்டது. இவ்வளவு பாங்க்குகள் ஏற்படுத்தி நடத்தி வருகின்றனர் என்றால், மொத்தப்பணமும் வடநாட்டிலிருந்துமூட்டைகட்டிக் கொண்டு வந்தது என்றல்லபொருள். ஒருபாங்க் அமைத்து, அதனுடையவளத்தைவிளம்பரப்படுத்தி விட்டால், பணம் இருக்கும் இடம் தேடிப்பணம் மேலும் உருண்டோடி வருகிறது. ஆகவே வடநாட்டவர் இங்கு பாங்க்குகளை அமைப்பதுஎன்றால், அதிலே நம் நாட்டுப்பணம் குவிகிறது என்றுதான் பொருள். தொழில்வளரப்பணம் தேவை என்று ஒருபுறம் இங்கு மக்கள்கூவ, மற்றோர்புறத்திலே, நமது நாட்டுப்பணத்தையேபாங்க் வைத்து இழுத்துக்கொண்டு, அதைக் கொண்டு, இங்கு தொழில் வளருவதை ஆதரிக்கவோ, தடுக்கவோ தங்களுக்கே சக்தி வரும்படியான சூக்ஷமவேலைகளைச் செய்கின்றனர், வடநாட்டுப் பொருளாதாரச்செப்படி வித்தைக்காரர்கள், இது பற்றி யோசிப்பதே பாரதமாதாவுக்குக் கோபமூட்டும் என்று இங்குள்ள பரமபக்தன, தேசியத்தோழன் எண்ணுகிறான். அவனுக்குப்பாபம், தொழில்வளர்ச்சிஎன்? காந்தியார்தான் 'குடிசைத்தொழிலைக்'கவனிக்கச் சொல்லிவிட்டார் தக்ளியையும்கைராட்டையையும் தந்துவிட்டார், "ஆடுராட்டே! சுழன்று ஆடுராட்டே!" என்று ஆனந்தமாகப் பாடுகிறான். பணமூட்டைகள் அங்கே வடநாட்டிலே குவிந்துவிடுகின்றன.

★

போரின் காரணமாக, இங்குப்பணப்பெருக்கம் ஏராளம். ஒன்றுக்குப் பத்தாக விலை கொடுத்து வாங்குபவர்களைக் காண்கிறோம். இந்தச் சமயத்திலே, பணத்தை வைத்துக்கொண்டு என்னசெய்வதென்று தெரியாமலிருக்கும், "ஆசாமிகளை" வடநாடு, மோப்பம் பிடித்து விட்டது.ஏற்கனவே இருக்கும் நிலையைமேலும் உயர்த்திக்கொள்ள கடந்த ஐந்தாறு ஆண்டுகளாகமுயற்சியைப்பலப்படுத்திக்கொண்டவண்ணம்இருக்கிறது. இங்கேயார் அதைக் கவனிக்கமுடிந்தது, நாட்டிலே உணர்ச்சி மிக்கவரெல்லாம், வெள்ளையனே! வெளியேபோ! என்று முழக்கமிடும் "தேசிய"க்காரியத்திலே ஈடுபட்டிருந்தனர், எனவே சந்தடியைச் சாக்காகக்கொண்டு சத்தமின்றிஉள்ளே நுழைந்த வடநாட்டவரைப்பற்றிச் சிந்திக்க நேரமில்லை. வடநாட்டார், பணநடமாட்டம் ஏராளமாக இருப்பது கண்டு, இந்தப் பெருக்கம், புதிய தொழிற் சாலைகள் அமைக்கப்பயன்பட்டுவிடும் என்பதை உணர்ந்து, அந்தச் சக்தியைக் கட்டுப்படுத்தித் தங்கள் கரத்திலே வைத்துக் கொள்ளவேண்டுமென்று, திட்டம்தயாரித்து, பல புதியபாங்க்குகளை ஏற்படுத்திவிட்டனர்; அதாவது பொருளாதாரப் போருக்குப் புதிய பாசறைகள் ஏற்படுத்திக்கொண்டனர். இந்தப்போர் ஆரம்பிப்பதற்குமுன்பு வரை, ஜப்பானுக்குப் பழைய இரும்புவிற்று வந்தோம், பிறகு நமது இரும்பு நமக்கே குண்டாகி, நம்மவரை நாசம் செய்தது. இப்போது, வடநாட்டார் அமைக்கும் பொருளாதாரப் பாசறைக்கும் நாமே பொருளும் தருகிறோம்! டிபாசிட்டுகள், சேமிப்புகள், என்ற பெயரால் எவ்வளவோ பணம் பாங்குகளிலே சென்று தங்குகின்றன! இந்தப் பணமே பிறகு, இந்நாட்டுத் தொழில் வளர்ச்சிக்கே ஊறுதேட உதவக்கூடும்.

★

கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக வடநாட்டவர்நடத்தத்தொடங்கிய

(6-ம் பக்கம் பார்க்க)




ஜெயராம்காயசுத்திலேகியத்தைச் சாப்பிடுங்கள்

தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி, வயிற்றுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம், தட்டல்வாதம், இடுப்புவலி, மூலநோய், இவைகளைப்போக்கி மலத்தைச்சுகமாய்ப்பிரிக்கும்

அற்புத சஞ்சீவி

ஜெயராம் காயசுத்தி லேகியம்

1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2—2—0.

வி. பி. பி. வேறு.

ஜெயராம் வைத்தியசாலை,

28, காசிவிஸ்வாநாதர் கீழ்வீதி, கும்பகோணம்.

எமது சோல் ஏஜண்ட்:—

M. E. அப்துல் ரகிமான் சாகிபு, புகையிலை வியாபாரம்.

பெரிய கடைவீதி, திருவண்ணாமலை.


## பொங்குக இன்பம்! ★ தங்குக எங்கும்!

### ஏஜண்டுத்தோழர்களுக்கு அறிவிப்பு

ஏஜண்டுத் தோழர்களிற் பலர், பலகடிதங்கள் எழுதியும் தங்கள் பாக்கியை ஒழுங்காக அனுப்புவதில்லை. எனவே, பாக்கியுள்ள தோழர்கள் இன்னும் ஒருவாரத்திற்குள் தங்கள்பாக்கி முழுவதையும் அனுப்பாவிட்டால் எவ்விதமுன்னச் சரிக்கையுமின்றி ஏஜன்சி நிறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**மானேஜர்**

### நம் நாடு

புனலிடை மூழ்கி,
பொழிலிடை உலவி
பொன்னார் இழையும்
துகிலும் பூண்டு
கனிமொழி பேசி
இல்லறம் நாடும்
காதல், மாதர்
மகிழுறும் நாடு

# திராவிட நாடு

காஞ்சி 13—1—46 ஞாயிறு

## திருநாள்

பொங்கற் புதுநாள் வந்துற்றது, புன்னகை பூத்தது, புத்தாடை அணிந்தோரின்முகமெல்லாம். வாழ்க்கையின் அன்றாடத்தொல்லைகளை அகம் தாங்கித் தாங்கி இருப்பினும், அன்று ஒரு நாளேனும் அவற்றினைத் தூங்கவைத்துவிட்டு, மகிழ்வுடன் இருப்பர் எங்கும். பொங்கற்புதுநாளன்று, இன்பம், பொங்குக, எங்கும் தங்குகஎன்று கூறி, நமது வாழ்த்துரையை அன்பர்களுக்கெல்லாம் வழங்குகிறோம்.

போர் நீங்கிச்சமாதானம்பிறந்த புத்தாண்டுவிழாவிலேயும், போர்நெருக்கடி எனும் புகைபட்டுக் கசங்கியகண்களிலே, பழையஒளி மீண்டும் முழுதும் தோன்ற முடியாத விதத்திலே, சூழ்நிலை இருக்கிறது. குறிப்பாகத் தமிழகத்திலே, இவ்வாண்டு, மழையில்லை, விளைவில்லை, எனவே மனதுக்கு நிம்மதியில்லை என்ற மொழியே எங்கும் கேட்கப்படுகிது. வெடித்துக் கிடக்கும் வயலைப்பார்த்து நொடித்துப்போகும் கிராமவாசி, இவ்வாண்டுமுழுதும் எங்ஙனம் காலந்தள்ளுவது என்ற கவலையில் மூழ்கிக்கிடக்கிறான். சோறிடும் கிராமத்தானே சோகத்திலே இருக்கிறான் எனில், வயல் காணப்பட்டினத்தானின் நிலை எங்ஙனம்இருக்கும்? எனவே, இவ்வாண்டு உணவுப்பஞ்சம் ஏற்படாத படிதடுத்துக்கொள்வதற்கான, வழிவகைகள் கண்டுபிடிப்பதிலேயே, கருத்துள்ளவராகஅனைவரும், அதிகாரிகளும் பொதுமக்களின்தலைவர்களும் இருக்கவேண்டும், என்றுகேட்டுக்கொள்கிறோம். பங்கீட்டு அரிசி தந்துவரும் சர்க்கார், கோதுமைதரஎண்ணம்ஆனால் அதுவும் இல்லை, என்று கூறுகின்றனர், வள்ளிக்கிழங்கு வழங்கலாம் என்று கூறுகின்றனர். பெரியதோர் பொறுப்பு இவ்வாண்டு இப்பகுதிக்கு ஏற்பட்டுவிட்டது.

பொறுப்பினை உணர்ந்து, கடமைகளைக்காலமறிந்து செய்து, அறுவடைகண்ட விழாவே பொங்கற் புதுநாள். இது "சூரியபகவானுக்கோ," "சோம தேவனுக்கோ" சோடசோபசாரம் செய்யும் நாளல்ல. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில் உண்டு கோழுத்திருப்போரை நிந்தனை செய்வோம்" என்ற கவிதையின் கருத்தைக் காட்சியாக்க வேண்டிய உறுதி கொள்ளவேண்டிய நாள். திருத்தா வயலாக, காட்டு வெள்ளத்தைநம்பி, கரை, கட்டு, காவல் இன்றி, வரம்பின்றிக்கிடந்து, விளைந்தகாட்டுக் குருவிகளுக்கு இடமளித்து, வளம்குன்றி, வகைஇழந்து கிடக்கிறது.

"வண்மைசேர் தமிழ்நாடெங்கள்
நாடு
வாழ்த்துவோம் அன்போடு"

என்றுபுதுவைப்பொன்மொழியார் பூரிப்புடன் வாழ்த்திய இந்நாடு. உழைப்பின்பயனால் உறும் உள்ள மலர்ச்சியைவிளக்கும்விழாகொண்டாடும் இந்நாளிலே, நம் நாட்டை நலியச்செய்யும் சிறுசெயல்யாவையும், போக்கிடச் சூள் உரைத்திடுக, சோர்வின்றி உழைக்க முன்வருக! என்று தமிழரைக் கேட்டுக்கொள்கிறோம்.

ஆகவே, இந்தப் பொங்கற்புது நாள் பரிசாகத் தமிழகத்துக்கு புரட்சிக்கவிஞர் கூறிய,

"மனுவின் மோழி அறமான
தோரு நாள் அதை
மாற்று நாளே தமிழர் திருநாள்!
சினம், அவா, சாதி, மதம்புலை
நாறும் யாகம்
தீர்ப்பதே இந்நாளில் நல்ல
றம் ஆகும்!

என்றசெய்யுளைக்காணிக்கையாகத் தருகிறோம்.

6-ம் பக்கத் தொடர்ச்சி

ஒருமாயை!" என்று காலட்சேபக்காரர் பாடும் பாடலைக்கேட்டுப் பரவசமாகவேண்டியதுதான்! வேறே என்ன செய்யமுடியும்? பணத்தோட்டமோ, பனியாக்களிடம் சிக்கிக் கொண்டது, பாதையிலே கிடப்பவர் 'பஜனை' பாடாதுவேறு என்ன செய்வது! இந்தவடநாட்டுப்பொருளாதாரஏகாதிபத்யத்தை ஒழிக்கத்தான் திராவிடநாடு தனிஅரசாக வேண்டும் என்று கூறுகிறோம். துருக்கியை முஸ்தபாகமால் பாட்சாதனி அரசு ஆக்கியதும் செய்த முதல்வேலை, அதுவரை துருக்கியைத் தங்கள்பொருளாதாரப்பிடியிலே வைத்துக்கொண்டிருந்த அர்மீனியர்கள் என்ற வகுப்பினரின் ஆதிக்கத்தைச்சட்டமூலம் ஒழித்ததுதான். பிறகுதான், துருக்கி மூச்சுவிட முடிந்தது. அதற்குமுன்வரை, துருக்கி, "ஐரோப்பாவின் நோயாளி என்று கேலி செய்யப்பட்டுவந்தது. திராவிடம் தனி அரசு ஆனால், இங்கு தொழில் துறையிலும், பொருளாதாரத்துறையிலும், வடநாட்டார், ஆதிக்கம் செலுத்த முடியாதபடி சட்டரீதியானஏற்பாடுகளைச் செய்துகொள்ள முடியும். இந்நாட்டுப் பணத்தைப்பர்மாவுக்குக்கொண்டு போகாமல் இருக்கச் செய்யவும் முடியும், வடநாட்டு முதலாளிகள் மோப்பம் பிடித்துக்கொண்டு இங்குவருவதையும் தடுக்கமுடியும்! இந்நாட்டவரை வெளிநாட்டுக்குக்கூலிகளாக அனுப்பிவைக்கும் மானக்கேடானகாரியத்தைத்தடுத்துஅவர்களை இங்கே வாழவைக்க முடியும். இவ்வளவு இன்பம்தரும்மார்க்கம், திராவிடம் தனி அரசு ஆகவேண்டுமென்ற இலட்சியத்தில் இருக்கிறது. இதனை எங்கே உணருகிறார்கள்! காசியைத்தங்களுக்குப்புண்ய க்ஷேத்திரமாகவும், டில்லியை அரசியல்தலைமை ஸ்தானமாகவும், வார்தாவை தேசிய பீடமாகவும், பம்பாயை இலட்சுமி கோயிலாகவும் ஏற்படுத்திவிட்டு, இங்கு,

"செந்தமிழ் நாடென்னும்
போதினிலே
இன்பத் தேன்வந்துபாயுது
காதினிலே!"

என்று பாடுகிறார்கள். இன்பத் தேனா பாய்கிறது? உண்மையா?

5-ம் பக்கத் தொடர்ச்சி

அதற்கான திட்டம் கிடையாது. அதுஒருதேர்தல்காளான் கூட்டம், எனவே, தேசப்பணிபுரியும் நிலை அவர்களுக்கு இல்லை. ஆட்சிமுறை எப்படி அமையவேண்டும் என்பதைஎடுத்துக்கூறி மக்களைத்தயாரிக்கும் மாண்பு திராவிடர் கழகத்துக்கே உண்டு. அந்த மகத்தான வேலையை பெரியார் இடைவிடாது செய்து வருகிறார்.

டாக்டர் அம்பேத்காரின் அறப்போருக்குப் பழங்குடி மக்களின் பேராதரவு இருக்கிறது; ஆனால்தேர்தலிலே, தனித்தொகுதி இல்லாததால், புனா ஒப்பந்தப் பொறியிலே சிக்குண்டு, அந்தச்சமூகம் சீரழிகிறது. புனா ஒப்பந்தத்தை ஒழித்துவிடவேண்டுமென்று டாக்டர் அம்பேத்கார் கூறுவது, காரியத்திலே நிறைவேறிவிட்டால், முஸ்லிம்கள் எப்படி முஸ்லிம் தொகுதிகளிலே, வெற்றி பெறுகிறார்களோ அது போல் பழங்குடி மக்கள் பெறுவர். ஆனால் "ஜாதி இந்துக்களின்" ஓட்டுகளைக்கொண்டே பழங்குடி மக்களின் அரசியல் வாழ்வு நிர்ணயிக்கப்படும், என்றால், "மூர்த்திகளும் முனுசாமிகளும்," முப்புரியினருக்கு மூட்டை தூக்கிகளாக இருக்கச்சம்மதிப்பவர்களுமே, சட்டசபைகளிலே கொட்டாவி விடுகிறசமயம்தவிரமற்றச்சமயத்திலே வாயைமூடிக்கொண்டு வீற்றிருக்கவாவதுமுடியும், டாக்டர்அம்பேத்கார், தனித்தொகுதிஇருந்தால் ஷெடியூல்டுவகுப்புபெடரேஷன்அபேட்சகர்களே சட்டசபைகளுக்கு வருவர் என்று கூறுவதிலே பொருள் ஆழம் இருப்பதை, பம்பாய்நகரில் நடைபெற்றஆரம்பத்தேர்தல்விளக்குகிறது. இப்போதுள்ள புனாஒப்பந்தமுறைப்படி, தாழ்த்தப்பட்டார் தொகுதியிலே தாழ்த்தப்பட்டார் அபேட்சகர் தாழ்த்தப்பட்டார் ஓட்டுகளால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், பொதுத்தொகுதியில் நின்று, அதிலே யார் பெருவாரியான ஓட்டுகளைப்பெறுகிறார்களோ அவர்களே சட்டசபை போவது என்று இருக்கிறது. தாழ்த்தப்பட்டாருக்கு முதல் தேர்தல், அவர்களுக்குள். இரண்டாவது தேர்தலோ, அவர்களிலே யாருக்கு ஜாதி இந்துக்களின் தயவும் ஆதரவும் இருக்கிறது என்பதைக்கண்டறிய. யாருக்கு, ஜாதி இந்துக்களின் தயவும் ஆதரவும் இருக்கும்? உரிமை கேட்பவருக்கா, அல்லது ஆண்டே! என்று அடங்கி இருக்கச்சம்மதிப்பவருக்காக! எனவேதான் தாழ்த்தப்பட்டாருக்காக உரிமைப்போர் நடத்துபவர்கள், இரண்டாம் தேர்தலில் தோற்கடிக்கப்படுகிறார்கள்! முஸ்லிம்களுக்கு இருப்பதுபோலத் தனித்தொகுதி, இருந்தால், சந்தேகமின்றி அறப்போர்வீரன் அம்பேத்காரின் கட்சியே வெற்றிபெறும்.

பம்பாய்நகருக்கு, சட்டசபைத் தேர்தலுக்காக, புனா ஒப்பந்த முறைப்படி, ஆரம்பதேர்தல் ஜனவரி 3-ந்தேதி நடைபெற்றது. பைகுல்லா—பரேல் என்ற தொகுதியிலேயும், வடபம்பாய் தொகுதியிலும். இருதொகுதியிலும் நாலு நாலுபேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இனி இவர்கள் ஜாதி இந்துக்களின் ஓட்டுகளைப்பெற மற்றோர் தேர்தல் நடைபெறவேண்டும். இப்போது நடைபெற்ற தேர்தலைக் கவனியுங்கள்.

பைகுல்லா—பரேல் தொகுதியிலே அம்பேத்கார் கட்சியினர் தோழர் பி. ஜே. தியோருக்கார், 11,334ஓட்டுகள் பெற்றிருக்கிறார், அவரை எதிர்த்துநின்ற காங்கிரஸ்வாதிதோழர் என்.எஸ். கஜ்ரோல்க்கார் 2,098 ஓட்டுகள் பெற்றார். அதாவது அம்பேத்கார்கட்சிக்குக் கிடைத்த ஓட்டுகளிலே ஏறக்குறைய 5ல் 1 பாகம் கிடைத்தது, சுயேச்சைவாதிகளாக நின்ற இருவருக்கு, முறையே 276, 116 ஓட்டுகள்கிடைத்தன. இந்தத்தேர்தல்காட்டும்பாடம் என்ன? பழங்குடிமக்களிடையே, பழங்குடி மக்களின் பாதுகாவலன் டாக்டர் அம்பேத்காரின் செல்வாக்கு, காங்கிரசுக்கு இருப்பதைவிட ஐந்துமடங்கு அதிகம்என்பது! தனித்தொகுதி முறை இருந்தால், டாக்டரின் கட்சியினர் இந்நேரம் சட்டசபை மெம்பர்தான்! அதுபோலவே வடபம்பாய் பகுதியில் டாக்டரின் கட்சியினரான தோழர் பண்டாரே 12,899 ஓட்டுகளைப்பெற்றார், அவரை எதிர்த்தகாங்கிரஸ் சோங்கேகார் 2088 ஓட்டுகள் பெற்றார், ஏறக்குறைய ஆறிலொன்று! சுயேச்சைவாதிகள் இருவர், ஒருவர் 1419ம் மற்றொருவர் 731 ஓட்டுகளும் பெற்றனர்.

டாக்டர் அம்பேத்கார், காங்கிரஸ் பழங்குடிமக்களின் பிரதிநிதி அல்ல என்று கூறுவதிலே, தவறு என்ன? அவர்பேச்சை மறுக்கும் அன்பர்கள், இந்தப்புள்ளி விவரம் காட்டும் பாடத்துக்கு என்னபதில் கூறப்போகிறார்கள்!!

டாக்டர்
**எம். ஜ. என். தயாரிப்பு**
மானிடதேகத்திற்குப், புத்துயிர்தரும் மூன்று சஞ்சீவிகள்.
(30-வருடம் பிரசித்திபெற்றது)
1. ஜெய சஞ்சீவி (டானிக்)
வீரியசேதாரம், நரம்புத்தளர்ச்சி, இவைகளைக் குணப்படுத்தி இழந்துவிட்ட இல்லற இன்பமளிக்கும், உயர்தர பானகம்.
புட்டி ஒன்று ரூபாய் 3—4—0
2. நயன ஜீவதைலம்
நரைத்த கேசத்தைகருமையாக்கி, கேசம் உதிர்வதை நிருத்தி. கறுத்து, அடர்ந்து, நீண்டகேசத்தை வளர்க்கும். சிரசு, கண், காது, மூக்கு தொண்டை இவைகளின், வியாதிகளை நீக்கும் உன்னத தைலம்.
புட்டி ஒன்று ரூபாய் 3—4—0
3. வசந்த கிருதம்
வீரியத்தை உற்பத்திசெய்து, தசைகளை பலப்படுத்தி, மெலிந்ததேகத்தைப் புஷ்டியாக்கி வசீகர மளிக்கும் சிறந்த சஞ்சீவி
புட்டி ஒன்று ரூபாய் 3—8—0
தபால் செலவு பிரத்தியேகம்.
ஸ்டாகிஸ்டஸ்:
**ஹேல் அண்டு கோ., கெமிஸ்ட்ஸ்,**
1-288, எஸ்பிளனேட் ரோட்,
சென்னை.
**சோபே மெடிகல் ஸ்டோர்ஸ்,**
571, பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, சென்னை.
விபரங்களுக்கு:—
**எஸ். ஏ. லாபரட்டரி,**
8-1, கல்மண்டபம் ரோட்,
இராயபுரம், சென்னை.

**ராஜம் விலாஸ்**
**கைத்தறி ஜவுளிகள் -:- கலர் புடவைகள்**
**உயர்தர ரகங்கள்! உத்தரவாத ஜரிகை!!**
**80, 100 செ. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!**
**ஒருமுறை விஜயம் செய்யுங்கள்**
ராஜம் விலாஸ்,
சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் P.O. திருச்சி.

# தமிழ் இசை

பிரத்யேக விமர்சனம்

(வீரன்)

★

## இடம்:- சென்னை மெமோரியல் மண்டபம்

காலம்:— 6—1—46 காலை—மாலை இருவேளையும்

ஜமா:—

மதுரை சர். பி. டி. இராஜன் — வாய்ப்பாட்டு
மிர்ஜாபூர் ஜெமின்தார் — மிருதங்கம்
சென்னை மதனகோபாலர் — கஞ்சிரா

*இன்று நடந்த இசை விழாவிலே, வீழ்ந்துபோன கட்சியைத் தூக்கி நிறுத்த முன்வந்த—முன்னால் இழுத்துவிடப்பட்ட—மதுரை சர். பி. டி. இராஜன் அவர்களின் இசையிலே, சபையினர், மெய்மறந்து போயினர். முக்கியமாக, அவருடைய இசையிலே 'முகாரி' ஆலாபனை நேர்த்தியாக இருந்தது.*

### பிரதம பாடல்

*இராகம்:—முகாரி* *தாளம்:—ரூபகம்*

*[மெட்டு, அமைத்துக்கொள்வது. தாளத்தை மாற்றினாலும் தயவு செய்து இராகத்தை மட்டும் மாற்றவேண்டாம், பாவம்கெட்டு விடும். பாவத்திலே, பா, கலா ரசிகர் T. K. சிதம்பரநாதரின் உச்சரிப்பு முறைப்படி!]*

என்னசெய்வது, நண்பரே! நாம்
இனி ஏதுசெய்வது, தோழரே!

தேர்தலும் தோற்றது, தேகமும் இளைத்தது
தேடிய பொருளோ நம்மைகூட மறுத்தது
ஓடியே வெளியிட்டார் ஓலமாம் அறிக்கையை
நாடியே வந்தநம்மை நட்டாற்றில் கைவிட்டார்.

கட்சிக்குத் தலைவன் நான் கனதனவான்களே!
காண்கிறேன் முகங்களை சோகமே தாங்கிட
ஏங்குதே என்மனம், தூங்குதே உள்ளமும்
பாங்குடன் கூறுவீர், பலன்உண்டோ இனியுமே!

நாடோ நமைஅறிய ஏடோ ஒன்றுமேஇல்லை
பாடுபடுவதற்கே பண்பினர் யாரும் இல்லை
ஏனோ எனக்குத்தொல்லை, நீக்குவீர் இச்சிக்கலை
தேனோ தோல்வித்தொல்லை, நானேஅதற்கு?சள்ளை!

வரும் தேர்தல்தன்னிலே வகையுடன் நில்லாவிடில்
வானம் இடிந்திடாது, வாழ்வும் வறண்டிடாது
வருமுன் உரைத்தேன்உண்மை, தெரிமின் இதுநன்மை
வகைஉண்டெனின் சொல்மின், வாய்திறந்து பேசுமின்.

ஊரெங்கும் செல்லுக! உட்பகை வெல்லுக!
உற்றதுணையெனவே ஒரு ஏடு-தேடுக
நற்றவம் துணைசெய்யும, நாதன்முன் நிற்பானே
நம்பினோம் வேலனை, நாம்வெல்வோம், ஏகியே.

★

குறிப்பு:— *நாதன்—கடவுளைக்குறிக்கும் சொல். பழய ஜஸ்டிஸ் ஆசிரியரை அல்ல.*

விசேஷக் குறிப்பு:— *அப்சர்வரின் அடாணாவும், சர். இராஜனின் 'சண்முகப் பிரியா'வும், எதிர்பார்க்கப்பட்டன. நடைபெருததால் ரசிகர்கள் வருந்தினர்.*

*வீரனைச் சென்னை சென்று தமிழ்இசை விழாபற்றிய விமரிசனம் எழுதிக்கொண்டு வா, என்று அனுப்பினேன். அவன் இந்த இசை விமர்சனத்தை அனுப்புகிறான், குறும்புத்தனமாக. சென்னை, மெமோரியல் மண்டபத்தில் தேர்தல் ஜஸ்டிஸ் கட்சியை நடத்துவதா வேண்டாமா என்பதுபற்றி சர். பி. டி. இராஜன் தலைமையில் "தலைவர்கள்" கூடினராம். சர். ராஜன், கட்சிக்குப் பிரசாரம் இல்லை, பணம் இல்லை, ஆதரவுஇல்லை, ஆந்திராவில் ஆள்இல்லை, கேரளத்தில் கேட்பார்இல்லை, பத்திரிகை இல்லை, தேர்தலே பெரியதொல்லை, என்னசெய்வதுஎன்று தெரியவில்லை என்று சோகித்தாராம். வரப்போகும் மாகாணத்தேர்தலில் போட்டியிடாவிட்டால் ஒன்றும் முழுகிப்போகாது என்றும் கூறினாராம். மீர்ஜாபுர் ஜெமீன்தாரும், சென்னைத்தோழர் மதனகோபாலரும், மற்றும் பலரும் கலந்துகொண்டனராம். கடைசியில், தேர்தலுக்கு ஆட்களை நிறுத்துவதா வேண்டாமாஎன்பதுபற்றிஆங்காங்கு உள்ளவர்களைக்கண்டு பேசித் தலைவரே முடிவு செய்யட்டும் என்று தீர்மானித்தனராம். இதனை 'வீரன்' இசைவிழாவாகக்கொண்டு, விமரிசனமும் அனுப்பினான். வெளியிட்டேன், இல்லையேல் வசைபாடுவானே!!*

# அறப்போர் வீரர் ஆற்றிய உரை

## ஆரியக் காங்கிரசுக்கு அறைகூவல்

*டாக்டர் அம்பேத்கார், சென்னை, மதுரை, கோவை, ஆகிய இடங்களிலே வந்துபோனது, வெற்றிக் களிப்பிலேமெய்மறந்திருந்தவர்கள் முதுகில் சுறீல்என்றோர் அறைதரப்பட்டதுபோலாகிவிட்டது. அஞ்சா நெஞ்சம்கொண்ட, கொள்கையை எடுத்துக் கூறுவதிலேஅச்சம்தயை தாட்சணியம் பார்க்காத குணமும் கொண்ட, போராடும் பண்பினர் டாக்டர்அம்பேத்கார். அவருடைய ஆற்றலுரை, ஆரியக்காங்கிரசுக்கு ஒரு அறை கூவலாகிவிட்டது. 'சுயராஜ்யம், சுயராஜ்யம் என்று சுலோகத்தைச்சொல்லுகிறீர்களே; சுயராஜ்யம் யாருக்கு! சுயராஜ்யத்திலே, ஆட்சிமுறை எப்படி இருக்கும். அதைக் கூறவேண்டாமா? பண்டிதநேருவே!சர்தார்படேலே! காங்கிரஸ் சூத்திரதாரிகளே! உங்கள் அனைவரையும் கேட்கிறேன், யாருக்கு சுயராஜ்யம்? இதைத் தெளிவாகத் தைரியமாகக் கூறுங்கள். இந்து ஆட்சி என்றால் இஸ்லாமியர் ஏற்கார், இஸ்லாமிய ஆட்சி என்றால் இந்து ஏற்கார், ஜாதி இந்து ஆட்சி என்றால் பழங்குடி மக்கள்ஒப்பார்! ஏத்தகையதாகஇருக்கும் உங்கள் ஆட்சியின் இலட்சணம், ஏன் அதைக் கூறாமலேயே காலங்கடத்துகிறீர். சுயராஜ்யசர்க்காரின் சொரூபத்தைக் கூறுங்கள்" என்று டாக்டர்அம்பேத்கார் ஆவேசத்துடன் கேட்டபோது, ஆரியக் காங்கிரஸ் அலறாமலிருக்குமோ! "இந்தத் தென்னாட்டையே எடுத்துக்கொள்ளுங்கள். இங்கு பார்ப்பனஆட்சி நடைபெறுமானால், நீங்கள் சகித்துக் கொள்வீர்களா?" என்று கேட்டார், கூட்டத்தினர், "இல்லை! முடியாது! பார்ப்பன ஆட்சி கூடாது" என்று முழக்கமிட்டனர். சுயராஜ்யம், சுயராஜ்யம் என்ற சுலோகத்தை விடாமல் ஜெபிக்கும் தோழர்களை, அதற்கான வியாக்யானம்கூறும்படிகேட்கிறார் பகுத்தறிவுப்படைத்தலைவர்.*

*இங்கு, "அரசியல்தலைவர்களென்போர்," மத சமுதாயப் பிரச்னைகளைப்பற்றிப்பேசுவதே தவறு என்றும் அதனால் மக்களின் ஆதரவு கிடைப்பது கெட்டுவிடும் என்றும், பொதுவான அரசியலைப்பற்றி மட்டுமே பேசவேண்டும் என்றும் போதிக்கிறார்கள். இந்நாட்டு அரசியல்முறை கெட்டுப்போனதற்குக் காரணமே, இங்குள்ள, இடையிலே புகுந்த, மதசமுதாயக்கோட்பாடுகள்தான், என்பதைச்சிந்தனைச்சிற்பி பெரியார் இராமசாமி நன்கு உணர்ந்து, அச்சமின்றி எடுத்துக் கூறிவருவதுடன், அந்த மதசமுதாயக்கோட்பாடுகளை ஒழிப்பதே முதல்வேலை, முக்கியமான வேலை, அந்தவேலை நடந்தேறினால்தான் அரசியல்வேலை வெற்றிகரமாக நடைபெறமுடியும்என்று, கூறிவருகிறார். இது அரசியல்கட்சிப்பேச்சாகுமா என்று கேட்கின்றனர் சிலர். இவர்களுக்கு டாக்டர் அம்பேத்காரின் அரியஉரை தக்கபாடத்தைத் தந்திருக்கும். அவர் பகவத்கீதை, மனு, ஸ்மிருதிகள் என்பவைகளைப் பலமாகக்கண்டிக்கிறார். வகுப்பு அகிறையைப்புகுத்தி, ஜாதிவெறியைமூட்டிவிட்ட ஏடுகள் அவைஎன்றுவெளிப்படையாகப் பேசுகிறார். அந்தஏடுகள் காலத்துக்கு, நாட்டுநலனுக்கு ஏற்றவையாகா என்றுகூற அஞ்சவில்லை, இவைகளைக்கூறிவிட்டு, இந்தகைய ஏடுகளைக்காட்டி நாட்டு மக்களை அடிமைகளாக்கிய ஆரிய ஆட்சியைக் கண்டிக்கிறார், அந்த ஆரிய ஆட்சியை ஒழிக்க அரசியலைக் காப்பாற்ற வேண்டும் என்று கூறுகிறார். இது பொருளுள்ள பேச்சு. இங்கு நமது தலைவர் பெரியாரைப் பழிக்கும், "பார்லிமெண்டரி" ஆசாமிகளோ, அரசியலைக்கைப்பற்ற வேண்டும், என்று கூறுகிறார்களே தவிற, எதற்காகக் கைப்பற்றவேண்டும், கைப்பற்றிச் செய்யப் போகிற காரியங்கள் என்ன, அரசியல் அதிகாரம் வந்தால் என்னென்ன மாறுதல்களைச் செய்ய உத்தேசிக்கிறார்கள் என்பதையே கூறுவதில்லை! கூறாததுகூட ஆச்சரியமல்ல, மனதிலே அது பற்றி அவர்கள் திட்டமிட்டதுமில்லை! என்னசெய்வார்கள், என்று யூகிக்க, அவர்களுடைய இன்றைய வாழ்க்கைமுறை, எண்ணம், ஏற்பாடுகள் ஆகிய வற்றைக் கவனித்தாலோ, அவர்கள் எங்கெந்தப் பதவி கிடைக்கிறதோ அதனைப் பாதுகாத்துக் கொள்ளவும், முடியுமானால், உயர்ந்த இடம் செல்லவும் பாடுபடுவார்களே தவிற, சமுதாயத்தை இன்று கெடுத்து வரும்எதனையும் களையும் துணிவு கொள்வார்கள் என்று நம்ப இடமில்லை! ஆட்சி வேண்டும்! ஆட்சிவேண்டும்! என்று அவர்கள் போடும்கூச்சல், காங்கிரசார் சுயராஜ்யம்வேண்டும்சுயராஜ்யம்வேண்டும் என்ற கூச்சல்போலவே, வெறும் சத்தமாக இருக்கிறதே யொழிய, விளக்கம் இல்லை! ஆங்கிலேயஆதிக்கம்கூடாதுஎன்று அவர்கள் கூறுவதுபோல, இவர்கள்பிராமண ஆதிக்கம் கூடாது என்று பேசுகிறார்கள். சுயராஜ்யம் யாருக்கு? என்று காங்கிரசாரைக் கேட்ட டாக்டர் அம்பேத்கார், சட்டசபை சென்று இஷ்டதேவதைகளைப்பூஜிக்க விரும்பும் அன்பர்களைப்பார்த்தும் கேட்டார், "உங்கள் ஆட்சி முறையை எடுத்துக் கூறுங்கள்" என்று. அந்தக்காரியத்தைச்செய்ய அவர்களால் முடியாது, ஏனெனில் அவர்களிடம்*

(4-ம் பக்கம் பார்க்க)



உறையூர்
எஸ். எம். எஸ். ஆர். பி.

சொந்தக் கைத்தறிகலர்புடவைகள் & 3-அகலம் தோத்திகள், சரிகை அங்கவஸ்திரங்கள்.

100, 80-நெ. நூலில் தயார் செய்யப்பட்டது. உத்திரவாதமுள்ள சாயம். உறுதியான—உடை, சுத்தமான—சரிகை, உயர்தரமான—ரகங்கள், நாணயமான விலைகள்.

S. M. S. R. [illegible],
கைத்தறி ஜவுளி வியாபாரம்,
34, பஞ்சவர்ணசுவாமி கோவில் தெரு,

## பணத்தோட்டம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

பாங்க்குகள், ஏற்கனவே நடாத்தி வரும் பாங்க்கிகளுக்குக் கிளைகளை இங்கு ஏற்படுத்திவரும் முறைஆகியவற்றைக்கூர்ந்து நோக்குவோர், பணபலத்தைக்கொண்டு வடநாட்டவர் என்னென்ன காரியத்தைச் சாதிக்க விரும்புகிருர்கள் என்பதை நன்கு உணரக்கூடும். போர்நெருக்கடிபற்றிய நினைப்பிலே மற்றவர்கள் இருந்தபோது, வடநாட்டவர் எதிர்காலத்தை மனதிலே படம் போட்டுப்பார்த்து, வேலை செய்தனர். **1941—44**ல் பணம் மலிவாகியகாலம். அந்தச்சமயமாகப்பார்த்து, பாங்க்குகளைத் துவக்கினர், அதாவது மழைபெய்து ஆறு நிறம்பும்நாட்களை அறிந்து, அணைகட்டித் தண்ணீர் தேக்கங்களை ஏற்படுத்திக் கொண்டனர். இனிஅந்தத்தேக்கங்களின் மூலம், வறண்டபூமியையும் வளமாக்கமுடியும். மேட்டூர் தண்ணீர்தேக்கம், ஒருதனிஆளின்சொத்தாகஇருந்தால், அந்தநீரைப்பாய்ச்சலுக்குஎதிர்பார்த்துள்ள நிலத்துச் சொந்தக்காரரின் நிலைமை என்ன ஆகும்! மேட்டூர் மிட்டாதாரர், வைத்ததுதானே சட்டம். 1941—44ல் பணவெள்ளம்! இதனைச்சரியானபடி "தேக்கி" வைத்துக்கொண்டனர் பனியாக்கள். நாட்டுநிலையை நிர்ணயிக்கக்கூடிய பெரியபாங்கு

2-காலம் பார்க்க

கள் இந்தப்பணப் பெருக்கத்தின் போது, வடநாட்டில் வடநாட்டவரால் 14-க்குமேல் துவக்கப்பட்டன. இங்கு 'பணம்,' பாழாக்கப்பட்டது, வடநாட்டிலே பாங்க்குகளில் தேக்கி வைக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சமயத்திலே மட்டும் துவக்கப்பட்டிருக்கும்வடநாட்டுப் பாங்க்குகளின் அதிகாரம் பெற்ற மூலதனம் 43 கோடி ரூபாய்க்கு மேலாகவே இருக்கிறது என்ருல், பொருளாதாரப்பிடி, வடநாட்டினிடம்எவ்வளவு பலமாகச்சிக்கிஇருக்கிறது என்பதை விவரிக்கத் தேவை இல்லை. பணமுடை உள்ள நாட்களிலே, பெரும்தொகைளைப்பாங்குகளிலே கொண்டுவந்து சேர்ப்பது கடினமான காரியம். பணப்பெருக்கமான நாட்களிலே மேற்படி பாங்க்குகள் ஆரம்பிக்கப்பட்டதால், பெரியதொகைகளை எளிதிலே திரட்டமுடிந்தது. இனி இந்தச் "சக்தி" வடநாட்டு, தொழில்வளர்ச்சிக்கு உறுதுணையாகும் என்பதை விளக்கவும் வேண்டுமா? பாங்க்குகளுக்கான மூலதனம், பங்குதாரர்கள் செலுத்தியது, இதற்கு அவர்களுக்கு இலாபத்துண்டு உண்டு. இந்தப்பெரிய மூலதனம் மட்டுமின்றி இந்தப்பாங்க்குகளிலே, பொருள்உடையோர், டிபாசிட்டாக, (சேமிப்பு)ப்பெரும்பொருள்போடுகின்றனர்; இதற்குக் குறைந்த அளவு 'வட்டி' தந்துவிட்டு, இந்தப் பாங்க்குகள், அந்தப் பணத்தைக் கொண்டு தமது இலாவாதேவி வேலையைச் செய்து, அதிகவட்டி விகிதத்துக்குப்பணம் கடன் கொடுத்து, இலாபம்பெறுகின்றன. இந்த வகையிலே 1941—44-க்குள் துவக்கப்பட்ட 14 வட்இந்திய பாங்க்குகளிலே எவ்வளவு டிபாசிட்டாகச் சேர்ந்திருந்தது? 1943ம்ஆண்டுக்கு மட்டும் உள்ளகணக்கின்படி, டிபாசிட்டாகக் குவிந்த தொகை.

### 42,10,64,328 ரூபாய்.

இந்தப்பெரிய சக்தியின் முன்பு திராவிடநாட்டிலே உள்ள கனதனவான்கள் அவ்வளவுபேரும், தங்கள் பொருளையும், அதிலே ஒரு பகுதியைத்திருவிழா தானம் ஆகியவற்றுக்காகச் செலவிட்டதால் கிடைத்ததாகக்கருதிக்கொண்டுள்ள அருளையும், திரட்டிநிறுத்தினுலும், எடைசரியாக இருக்கமுடியுமா? பணபலம் எங்கே இருக்கிறது? ஏகாதிபத்யபீடம் எவ்விடம் இருக்கிறது? என்பதைக்காட்டி விட்டோம், கருத்துள்ளோரெல்லாம் காணலாம்! இனி இந்தப்புதியபாங்க்குகளைப்பற்றிய புள்ளிவிவரங்களைத்தருகிருேம்; விவரம் கண்டேனும்விளக்கம் பெறட்டும் தேசியத்தில் மட்டும் வடநாட்டாருக்கு இளைக்காத இந்நாட்டுத் தோழர்கள்.

### 1941—44ல் புதிதாகத் துவக்கப்பட்ட பாங்குகள்

| | பாங்க்குகளின் பெயர் | தலைமை | துவக்கிய ஆண்டு | அதிகாரம் பெற்ற மூலதனம் | செலுத்தப் பட்ட மூலதனம் | டிபாசிட் 1943 மட்டும் | இலாபம் 1943 மட்டும் |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | அசோசியேடட் பாங்கிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா | பம்பாய் | 1942 | 25,00,000 | 622,255 | 89,12,697 | 54,414 |
| (2) | பாங்க் ஆப் ஜெய்பூர் | ஜெய்பூர் | 1943 | 20,00,0000 | 49,99850 | 2,86 47,588 | 1,29,735 |
| (3) | பாரத் பாங்க் | டில்லி | 1942 | 20,00,00,000 | 2,01,20,632 | 8,33,58,603 | 2,56,218 |
| (4) | டிஸ்கவுண்ட் பாங்க் ஆப் இந்தியா | பம்பாய் | 1942 | 100,00,000 | 8,02,945 | தெரியவில்லை | .......... |
| (5) | எக்ஸ்சேன்ஜ் பாங்க் ஆப் இந்தியா | பம்பாய் | 1942 | 250,00,000 | 15,61,695 | 123,59,962 | .......... |
| (6) | ஹபீப் பாங்க் | பம்பாய் | 1941 | 2,00,000,00 | 50,00,000 | 307,74,061 | 6,19613 |
| (7) | இந்துஸ்தான் மர்கென்டைல் பாங்க் லிமிடெட் | கல்கத்தா | 1944 | 200,000,00 | 50,00,000 | .............. | .......... |
| (8) | இந்துஸ்தான் கமர்ஷியல் பாங்க் | கான்பூர் | 1943 | 5,00,000,000 | 125,00,000 | 903,35,918 | 3,41,277 |
| (9) | நராங் பாங்க் | லாகூர் | 1942 | 100,00,000 | 654,987 | 65,46,220 | 40879 |
| (10) | நாஷனல்பாங்க் ஆப் லாகூர் | லாகூர் | 1942 | 20,00,000 | 16,15,625 | 103,11,331 | 93,065 |
| (11) | ஓரியன்டல் பாங்க் ஆப் காமர்ஸ் | லாகூர் | 1943 | 50,00,000 | 12,66,945 | தெரியவில்லை | .......... |
| (12) | பிரபாத் பாங்க் | லாகூர் | 1943 | 1.00 000 000 | 6,00,000 | தெரியவில்லை | .......... |
| (13) | யுனைடெட் கமர்ஷியல்பாங்கி | கல்கத்தா | 1943 | 4,00,00,000 | 1,00,00,000 | 12 77 18,757 | 4,10,875 |

திரட்டமுடிந்தவரையிலே தகவல் தரப்பட்டிருக்கிறது. பணப்பெருக்கம் நாட்டிலேமிகுந்திருந்ததால், பாங்க்குகளின்இலாபம், குறைவாக இருக்கிறது. இனி இப்பெரும் பணம் பரவி, தன் சர்வ ஆதிபத்யத்தின் கீழ் சகல தொழிலையும் கொண்டு வரும். நேரடியாகப் பாங்க்குகளிலே கிடைக்கக்கூடிய இலாபத்தைவிட, அந்த பாங்குகள் பரவச்செய்யும் பணத்தைக் கொண்டு நடத்தப்படும், தொழில்கள் மூலம் கிடைக்கக்கூடிய இலாபமே, அளவிலும்சரி, முக்யத்து வத்திலும்சரி பெரிது, ஒரு நாட்டின் பொதுநிலையைப் பாதிக்கக் கூடியது- அந்தச் சக்தியைப் பெறவே, வடநாட்டிலே, புத்தம்புதிய பாங்க்குகள் இத்தனை துவக்கப்பட்டன. இங்கு பணம் கிடைத்தது, பழனிமலை அப்பனுக்குப் படிக்கட்டுக் கைங்கரியம் செய்து கொண்டிருந்தனர்! இவ்வளவு பாங்குகள், வடநாட்டிலே ஏற்பட்டன, இங்கும் ஒரு பாங்க் துவக்கப்பட்டது, 1942-ல், அதிகாரம் பெற்ற மூலதனம் 5,00,000; செலுத்தப்பட்டதொகை 2,00,000; டிபாசிட் தொகை 11'94,063; இலாபம் 32,734; பாங்க்கின் பெயர் தாமஸ்பாங்க், இடம், திருவாங்கூர்! இந்தப் பட்டியிலே, பெரிய பாங்க்குகளை மட்டுமே குறிப்பிட்டோம். சில்லறைத் தேவதைகள் ஏராளம்! பணப்பெருக்கம் மிகுந்த இந்நாளிலே, 1941-லிருந்து புதிதாகத் துவக்கப்பட்ட பாங்க்குகளையே குறிப்பிட்டோம், இவைஅன்றி "பழயபெருச்சாளிகள்" வேறு பல உள்ளன. இவ்வளவு கோடிக்கணக்கான பணத்தைக்கொட்டி வைத்துக் கொண்டு, பண அரசுக்கோட்டை கட்டி, அதன்மீது வெற்றிக்கொடியைப் பறக்கவிட்டுக்கொண்டு வடநாடு வாழ்கிறது, அதன் வல்லமை வளருகிறது, இங்கோ, தாயின் மணிக்கொடிபாரீர்! என்ற கீதத்தோடு திருப்தி அடைந்து விடுகிருேம். இதுசரியா, முறையா? தேசியம் பேசுபவர் அங்கு பண அரசு அமைக்கிருர்கள், இங்கு இன அரசு கேட்கும் நம்மை ஏளனம் செய்கிருர்கள், நமது தேசியத் தோழர்கள். நியாயமா? இந்த வடநாட்டு பாங்க்குகள், சென்னை மாகாணமெங்கும் செல்வாக்குதேட, ஆங்காங்கு கிளைகளை ஆரம்பித்தபடிஉள்ளன. பாரத்பாங்க்குக்கு மட்டும் 216 கிளைஸ்தாபனங்கள் உள்ளன! ஆலப்புழை, பெங்களூர் கன்டோன்மென்ட், பெங்ளூர்சிடி, பெல்லாரி, பெஜவாடா, கொச்சி, கோவை, கூனூர், சென்னை, சென்னைமவுன்ட்ரோடு, மதுரை, மங்களூர், சேலம், செகந்திராபாத், திருச்சி, திருச்சூர், திருவனந்தபுரம் ஆகிய ஊர்களிலே பாரத்பாங்க் பரிபாலனம் செய்கிறது. இதன் பொருள் என்ன? இவ்வளவு இடங்களிலும், எந்தச் சமயத்திலே எந்தத் தொழில் நடத்தவும், தாராளமான வசதியை கரம்சந்த் பெறமுடியும், கருப்பண்ணன் செட்டியாரால் முடியாது; அவர் கையிலுள்ள பணத்தைச் செலவிட்டு, காலட்சேபம் வைத்து, "பணம் ஓர்பைசாசம்! பிரபஞ்சம்

(4-ம் பக்கம் பார்க்க)

## கோபுரம் ஏறி

8-ம் பக்கத் தொடர்ச்சி

மணங்கு எடையுள்ள தங்கத்தைக் கொண்டுபோனுன்" என்று. 2000 ஒட்டகங்களின்மீது ஏற்றப்பட்டனவாம் அந்தப்பெரும் பொருள்! ஆகப், பொருள்இருந்தது, அதனை 'அருள்வாங்க' அடியார்கள் காதைகளிலே கூறப்பட்ட முறைப்படி செலவிட்டனர். இலாபம், இலட்சக்கணக்கிலே மக்கள் செத்தது தான். இத்தகைய நிலைஏற்படக் காரணமாகஇருந்தது, பக்திக்காக எதையும் செய்வதே பெருமை தொண்டர் திறம் என்று பெரியபுராணம் புரிந்த போதனைதான் என்று கூறுவது தவறு? பெரியபுராணத்திலே பக்திக்காக எதையும் செய்யும் சித்தம் படைத்தவர்களின் கதைகள்தானே உள்ளன. அந்த ஏட்டைப் புண்ய ஏடு என்றும், ஆண்டவனே அடி எடுத்துக் கொடுக்க, அருமை மந்திரியார் அழகுறப்பாடியது என்றும் கூறிவிடவே, மக்கள் அதிலே கண்ட கருத்துக்களைக், கூடுமானமட்டில், அவரவர் சக்தியானுசாரம் அனுஷ்டிக்கவேண்டும் என்று உறுதிகொண்டனர், அதன்பயனுக, ஊரிலே நாசமே வந்துற்றபோதிலும், ஈசன் சேவை செய்தால்போதும், மக்கள் மடிந்தாலும் கவலையில்லை என்று இருந்தனர். பஞ்சம் தன்பசியைத் தீர்த்துக்கொண்டது. ஏற்கனவே தரப்பட்டுள்ள 'போதை' போதாதென்று, என் நண்பர் புலவர் இராசமாணிக்கனாரும், அந்தத்திருப்பணியிலே ஈடுபடுகிருரே! ஆண்டவன் முதலடிஎடுத்துத்தந்தார், ஆகவேஇது அருள்நூல் என்று நீறுபூசும் நிகண்டுதூக்கி சொன்னுர், ஏடுபலபடித்த என் நண்பர் நாடு நலிவதை மறந்து, இந்த ஏட்டிலே, கல்வெட்டும் சரித்திரமும் உண்டு, எனவே இதனைத் தள்ளலாகாது என்று கூறமுன் வந்துவிட்டார். எக்காரணம்கொண்டு கூறியதாக வேனும் இருக்கட்டும், இதுபோல அவர் கூறியதால், பழமையின் பிடியை, வர்ணாஸ்ரமத்தின்வலையை ஜாதிப்பித்தரின் நிலையை, முறையே பலமாக்குகிருர், வீசுகிருர், உயர்த்துகிருர் என்றுதானே ஏற்படும். இந்தக்காரியம் செய்ய இவ்வளவு பெரியபடிப்பு வேண்டாமே, 'அரஹரநமப்பார்வதி பதயே' என்று கூவுமளவு, குரல் வலிவு கொண்டாலே போதுமே, என்றுதான் நான் கூறுகிறேன். கோபுரமேறி கோழிமேய்ப்பானேன், குப்பைமேட்டிலேயே அந்தக் காரியத்தை எளிதாகச்செய்து விடலாமே என்று கூறுகிறேன்.

---

### பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள்

**மதுரைஜில்லா சுற்றுப்பிரயாண நிகழ்ச்சி**

13—1—46ல் மதுரை

14—1—46ல் பெரியகுளத்தில் பொதுக்கூட்டம்.

15—1—46ல் நிலக்கோட்டை

16—1—46ல் சின்னுளப்பட்டி

17—1—46ல் வாடிப்பட்டி

18—1—46ல் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் சொற்பொழிவு.

19—1—46-ல் சோளவந்தானில் பொதுக்கூட்டம்

20—1—46ல் காலை மதுரை தாவ முத்து நடராஜன் வாசகசாலைத்திறப்புவிழா. அன்றுமாலைதிண்டுக்கல்லில் பொதுக் கூட்டம்.

21—1—46 முதல்திருநெல்வேலி ஜில்லாசுற்றுப்பிரயாணம்.

## திராவிடத் தலைவர் பெரியார் வாழ்க!

# ★ சூழல் விளக்கு ★

## விடுதலை

இந்திய தேசிய இராணுவத்தினரான, காப்டன்ஷாநவாஸ், சைகல், தில்லான், ஆகியமூவரும், விடுதலை அடைந்ததுகேட்டு, மற்றக்கட்சிகளுக்கெல்லாம் சந்தோஷம்; காங்கிரசுக்கோ இரட்டிப்புச்சந்தோஷம், அப்படிஎன்றால், அந்தத்தோழர்களிடம், மற்றக்கட்சிகளுக்குக்காங்கிரசின் களிப்பிலே அரைப்பாகம் என்று அர்த்தமில்லை; மற்றக்கட்சியினர், அவர்கள்விடுதலை அடைந்தனரே என்றுமகிழ, காங்கிரசாரோ, விடுதலை அடைந்தவர்களைக்கொண்டு அவர்கள் சார்பாக வெற்றிக்கூட்டம், பாராட்டுக்கூட்டம் என்று பெயரிட்டுக் கூட்டங்கள் நடத்தி, அந்த உணர்ச்சியை "ஓட்டு" வேட்டைக்குப்பயன் படுத்திக்கொள்ளலாம் என்ற ஆசை கொண்டிருப்பதால் காங்கிரசாருக்குஇரட்டிப்புச் சந்தோஷம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், காப்டன்ஷாநவாஸ், அந்த ஆசையைக்கொஞ்சம் மட்டந்தட்டிவிட்டார். லாகூரில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்திலே பேசும்போது காப்டன்ஷாநவாஸ், "எங்கள் விடுதலைக்காகநாடு முழுதும் உழைத்தது. முஸ்லிம்லீக் உள்பட எல்லாஅரசியல்கட்சிகளும்உழைத்தன. நாங்கள் அவைகளுக்கெல்லாம் கடமைப்பட்டிருக்கிறோம்" என்று கூறினார். முஸ்லிம்லீக்கின்பெயரை, காப்டன் ஷாநவாஸ் உச்சரித்தது கூடச் சிலகாங்கிரஸ் அன்பர்களுக்குக்கசப்பூட்டி இருக்கும். காப்டன் ஷாநவாசும் அவருடைய சகாக்களும், எவ்வளவு நாட்களுக்கு, வரவேற்பு ஆரவாரத்தால், இந்திய உபகண்டத்து அரசியல் சிக்கலின் உட்பொருளைத் தெரிந்து கொள்ளாமலிருக்கமுடியும்!

இப்போதுங்கூட, அவர்கள் தெரிந்துகொள்ளவில்லை என்று எப்படிக்கூறமுடியும்? "இந்திய அரசியல் நிலைமையுடன் தொடர்பின்றிப் பல நாட்களாகி விட்டன. என்றாலும் சுயராஜ்யம் வராததற்குத்தடையாக இருப்பது பாகிஸ்தான்தானென்றால், பாகிஸ்தான் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டியதேமுறை என்று எண்ணுகிறேன்" என்று, காப்டன்ஷாநவாஸ், புதுடில்லியில் பத்திரிகைநிருபரிடம் கூறினார். காப்டன்ஷாநவாஸ் 'நேதாஜிசுபாஷ்' மரணமானார்என்றுநம்புகிறார் உருக்கமானமுறையிலே அந்தச்செய்தியைக்கூறினார். பொதுவாகவே, அந்த வீரர்களுக்குச்சுபாஷின்மீது அளவு கடந்த அன்பு இருப்பது தெரிகிறது. அவரை ஓர் இலட்சியபுருஷராகவே அவர்கள் மதிக்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட சுபாஷ்சந்திரபோஸ், காந்தியாரிடம் சிக்கிப் பட்டபாட்டை, படுத்தபடுக்கையிலிருந்துகொண்டு அவர்காங்கிரசை நடத்தும்போது, அவரைச்சூழ்ந்துகொண்டு, காந்தியர்கள் செய்த கொடுமைகளை, அவர் அரசியலிலிருந்துவிரட்டப்பட வேண்டுமென்று அவர்கள் எடுத்துக்கொண்டமுயற்சிகளை, காப்டன் ஷாநவாசும் அவருடைய நண்பர்களும்; தெரிந்துகொண்டபிறகு, வரவேற்புரைவழங்கும் கூட்டத்தாரின் உண்மைச் சொரூபம் தெரிந்துவிடும். அப்போது, தொழுது நிற்கும் பக்தர்களாகக் காட்சி அளிக்கமாட்டார்கள், தோள்தட்டிக்கும் வீரராவர்! அதுவரை, கிடைக்கக்கூடிய இலாபத்தைத் தாராளமாக அனுபவிக்கட்டும்காங்கிரசார். "போர்க்களத்திலே, இந்து—முஸ்லிம்—சீக்கியர் என்ற பேதமின்றி வாழ்ந்தோம்" என்று பேசும் வீரர்கள், நாட்டிலே உள்ள நிலையையும், இனஎழுச்சியின் தன்மையையும் உணர்வார்கள்—உணர்ந்தபிறகு, அவர்களைஊரூராக அழைத்துச்சென்று, 'பலன்' பெற விரும்பும் கூட்டம் ஓய்வு எடுத்துக்கொள்ளும்.

## சிகப்பும் பச்சையும்!

"உன்னை ஒன்றும் செய்யவில்லையே, உனக்கென்ன, நீ உன்வேலையைப் பார்த்துக்கொண்டு பேசாமல் இரு," என்றுகூறிவிட்டார், போர்க் கோலம் பூண்டுள்ள திருவாங்கூர்திவான் சர். சி. பி. இராமசாமிஐயர், நேருவைப் பார்த்து. "சுதேசசமஸ்தானங்களிலே, அடக்குமுறை நடக்கிறது, அதை நான் கண்டிக்கிறேன், திருவாங்கூரில், தடைஉத்தரவுகளும், சிறைபிடித்தலும் நடப்பது கண்டு என் மனம் தாளவில்லை" என்று பண்டித நேரு கூறினார்சென்றகிழமை. திருவாங்கூர் சர்க்கார் அதற்குப் பதில் விடுத்துள்ளனர். அதிலே உள்ள, ரசமான விஷயத்தைக் கவனித்தால், காங்கிரசைப் பற்றிச் சர். சி. பி. கொண்டுள்ள கருத்து, தெளிவாகிறது. யாரார்மீது திருவாங்கூர் சர்க்காரின் திருஷ்டி பாய்ந்திருக்கிறது என்ற பட்டியைத் தருகிறார் திவான்.

1. கம்யூனிஸ்டுகள்.
2. கத்தோலிக்கர்.
3. தொழிலாளர்.
4. சர்க்கார்நிலத்தைக்கேட்டு பெறாமல்சலிப்படைந்தவர்கள்.
5. பாகிஸ்தான்கிளர்ச்சியினர்

இந்த ஐந்துதரத்தார்மீது நான் நடவடிக்கை எடுத்துக் கொள்கிறேன், என்று கூறியதன் அர்த்தம் என்ன? உனக்கும் கம்யூனிஸ்டுகளை ஒழித்துக் கட்டவேண்டு மென்று தானே எண்ணம்; அதே காரியத்தை நான் செய்யும்போது—நீ—ஏனப்பா, அர்த்தமில்லாமல் கோபிக்கிறாய், என்றுசர். சி. பி. கேட்கிறார் என்று அர்த்தம்! யார்மீது, பாய்வதானாலும், அடக்கு முறை கூடாது என்ற பொதுநோக்கத்துடன் நேரு இருப்பார், அல்லது காங்கிரசின் கருத்து அது போலிருக்கும்என்று சர். சி. பி. எண்ணினால், இதுபோலக் கூறியிரார். அவருக்குத் தெரியும் குறிப்பாக.

1, பாகிஸ்தான்கிளர்ச்சியினர்
2. கம்யூனிஸ்டுகள்,

ஆகிய இரு கூட்டத்தாரையும் ஒழித்துவிட நேருவும் காங்கிரசும் திட்டமிடுவது. ஆகவேதான்திவான் நான் உனக்குப்பிரியமான காரியத்தைத்தானே செய்கிறேன். விஷயத்தைப்புரிந்து கொள்ளாமல் வீணாக் கோபிக்கிறாயே, என்றுகேட்கிறார். தேசியக்கொடிக்கு அவமானம் செய்யப்பட்டதாமே என்று நேரு கேட்டதற்கும், சர். சி. பி. சூக்ஷமமானபதிலைக் கூறிவிட்டார். இங்கு, "சிகப்புக்கொடிகளைத்தாங்கிக்கொண்டு, புரட்சிக் கோஷங்களைக் கூவிக்கொண்டு, தொழிலாளர்களைத் தூண்டி விடுகிறார்கள் கம்யூனிஸ்டுகள்" என்று கூறுகிறார். 'கொடிக்குத்தடை' என்றுநான் போட்ட உத்தரவு, உன் கண்ணை உறுத்தும். சிகப்புக்கொடியை அடக்கத்தான், இந்தச்சூக்ஷமத்தைத்தெரிந்துகொள். உன் 'தேசியக்கொடி'யை அடக்கியதாக அதற்கு அர்த்தமில்லை, சிகப்புக்கொடியை அடக்குகிறேன் என்றுதான், அதற்குப் பொருள்" என்று விளக்கம்தருகிறது திருவாங்கூர் அறிக்கை. "ஓஹோ! விஷயம் இப்படியா!" என்று கூறி, நேரு திருப்தி அடைவார் என்று நம்புகிறோம். சிகப்பும்—பச்சையும், நேருவுக்குப் பிடிக்காத கலர்கள், ஒன்று பொதுஉடைமை, மற்றொன்று பாகிஸ்தான், இரண்டையும் சர். சி. பி. ஒழிக்கக்கங்கணம் கட்டும் போது, நேரு ஏன் மகிழாமல் இருப்பார்! பாகிஸ்தான் பிரச்னைசம்பந்தப்பட்ட மட்டிலே, திருவாங்கூர் திவானுக்கு, சமஸ்தான முஸ்லீம்கள் பதிலளித்துவிட்டனர். எங்ஙனம்? இதுவரை, முஸ்லீம்களிடையே இருந்துவந்த பிளவு நீங்கிவிட்டது; முஸ்லீம் மஜ்லீசும் முஸ்லீம்லீகும் ஒன்றுபட்டு, திருவாங்கூர் சமஸ்தான முஸ்லீம்லீக் என்ற புதிய அமைப்பு ஏற்பட்டு, அது அகில இந்தியமுஸ்லீம் லீகுடன், இணைக்கப்பட்டு விட்டது! திவான் போர்க்கோலம் பூண்டதன் பலன், முஸ்லீம்களிடை இருந்து வந்தபிளவு போய் விட்டது, ஒற்றுமையும் உறுதியும் பிறந்துவிட்டது.

## ஜெய்ஹிந்த்

வடநாட்டு ஆடைகளிலேமோகம் கொள்வதுபோல, இப்போது வட நாட்டுக்கோஷமான 'ஜெய்ஹிந்' திலே, மோகம் கொண்டு, கத்துகிறார்கள். இது அர்த்தமற்ற கூச்சல். அஹிம்சா தத்துவத்தை மறுத்தவர்கள் வேண்டுமானால் "ஜெய்ஹிந்" என்று கோஷிக்கலாம், மற்றவர்கள் கோஷிக்கலாமோ! மேலும், 'ஜெய்ஹிந்' என்றால் யாருக்குப்புரியும்! அர்த்தமே தெரியாது. வடநாட்டு சுலோகம். இங்கே 'வந்தேமாதரம்' சொன்னால் புரியும்" என்று, ஆச்சாரியார் பேசினார். அவரை "ராஜாஜி!" யாக்கியவர்களுக்கு, இது கோபத்தை மூட்டி விட்டது. வடநாட்டுக் கோஷம், என்றுஇன்று பேசுகிறாரே, ராஜாஜி என்பது வடநாட்டுப்பாணி, வந்தேமாதரமும் வடமொழிதானே; இதையெல்லாம் சரி என்று கொண்டவர் ஜெய்ஹிந்துக்குக்கோபிக்கலாமா? என்று கேட்கின்றனர். நியாயம். ஆனால்உண்மை என்னதெரியுமோ? ஜெய்ஹிந்து, சத்தம், வடமொழி என்பதற்காக அல்ல, ஆச்சாரியார் கோபிப்பது; அவர்தான்வடநாட்டுமொழியான இந்தியைக் கட்டாயபாஷையாக்கினவராயிற்றே, அவருடையகோபம் வேறுகாரணத்துக்கு! 'ஜெய்ஹிந்த்' என்ற சத்தத்தோடு சேர்ந்துவருவது, சுபாஷ்சந்திரபோசின் கீர்த்தி—அது கேட்கும் போது அந்தக் கேளாக்காதும் குடைச்சல் எடுக்கிறது! எந்த போசைக் கவிழ்த்தோமோ, யாருடையதுஓட்டைப் படகு என்று கூறினோமோ, அந்த ஆசாமி "நேதாஜி" யாகி அவருடைய கீர்த்தியைக் கூறுவதான முறையிலே "ஜெய்ஹிந்த்" என்று கோஷம்கிளம்புகிறதே, இதுகேட்டு நாம் சகிப்பதா என்ற கோபம்—பாபம், அவருக்கு. அந்தஉண்மையைஎப்படி அவர்மறைக்காது கூற முடியும்? எனவேதான், வடமொழி—அர்த்தமற்றது என்றுகூறுகிறார்.

## காணலாம், காண்பர்!

பிரிட்டிஷ்பார்லிமெண்டரிதூதுக் கோஷ்டி வந்தாகிவிட்டது. அவர்கள் நாட்டின் நானா பாகங்களையும் பார்க்கப்போகிறார்களாம். அதுபோலவேநாட்டின் பல பாகங்களிலுள்ளவர்களும் அவர்களைக் காண்பர்! ஆனால் கண்டபிறகு, என்ன நடக்கும்? யாருக்குத்தெரியும்! அவர்களுக்கே தெரியாது, வேண்டுமானால் இங்கே உள்ள சிலர், சீமைசென்று திரும்பியவர்கள், "London Returned" என்று கூறுவது போல, இந்தப் பார்லிமெண்டரி கோஷ்டியாரும், "இந்தியா சென்று திரும்பியவர்கள்" India Returned என்று கூறிக்கொள்ளலாம்; வேறு என்ன நடக்கும்!

---

## சின்னத் தலை

1-ம் பக்கத் தொடர்ச்சி

வேண்டுமென்பதுதானே பெரிய தலைத் தேசியத்தின் எண்ணம்.

நம்மைச் சின்னத்தலை என்று சொல்ல யாருக்கும் அதிகாரம் இல்லைஎன்பதபிப்ராயம்தான். சொல்லுகிறவர்களின் அலட்சியமும் ஆணவமும் மட்டுமல்ல காரணம். நம்முடைய உணர்ச்சியற்ற தன்மையும், எதையும் நம்பும் குருட்டுப்புத்தியுமாகும். 'என்னை அடிமையாக்கின; மடையன் என்கிற சூத்திர மந்திரத்தை எனக்குச்சொல்; அதனால் எனக்கு எல்லாபாக்கியமும் வந்து, பரகதிகிட்டட்டும்; என்தலையை உன்பாதத்தில் வைக்கிறேன்' என்று வலிய அழைத்து எல்லாச் சாதனங்களையும் கொடுத்துப், பிள்ளைப்பேற்றிலிருந்து பாடை ஏறிப் பரலோகம்போகும்வரையிலும்பார்ப்பனர் சொற்கேட்டு வணங்கித், தெய்வலோகத்தில் தெய்வங்கள், அவதாரதெய்வங்கள், தேவர்கள், நரக சுவர்க்கங்களின் சாவிகள்எல்லாம்பார்ப்பனர்கையில்தான்இருக்கின்றனவென்று நம்பிநடக்கும் நம் தலைகளைப் பெரியதலை என்று யாராவது சொல்வார்களா? சூத்திரனை பார்ப்பனன் க்ஷேமம் விசாரிக்கையில் உன் தேகம்சுகமா என்று பட்டுத்தானே கேட்கவேண்டும். அதற்குமேல் ஒன்றும் கேட்க வேதம் இடம் கொடுக்கவில்லை. நம்மைப் பெரியதலை என்று சொல்ல வேதத்தில் இடமில்லை. நம்மை எல்லாம் சின்னத்தலை என்று சொன்னதெய்வங்களும், சின்னத் தலையாக்கின ஸ்மிருதிஇதிகாசங்களும், நாம்சின்னத்தலையாகநடந்துவரும்படிசெய்யும் புரோகிதச்சடங்குகளும் நம்மைவிட்டுப்போனால், நாமெல்லாம் பெரிய தலைதான்என்று ஈரோட்டுப் பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் சொல்லுகிறார். பெரிய தலையாக வேண்டுமென்கிறவர்கள் ஆலோசியுங்கள்; வேறு வழியிருந்தாலும் சொல்லுங்கள்.

முசல்மான்களையோ கிருஸ்தவர்களையோ சின்னத்தலைஎன்றுசொல்லலாமா? சொல்லக்கூடாது. ஏன்? அவர்களுடைய கடவுள் சின்னத்தலை பெரியதலையாக அவர்களைப் படைக்கவில்லை. எல்லாரையும் ஒரே தலையாகத்தான்படைத்திருக்கிறது. அவர்களின்வேதம் கிரியைசடங்கு எதிலும் சின்னத்தலை, பெரியதலை என்பதுகிடையாது. நம்துதெய்வம் வேதம்செய்து பிராமணன்கையில் கொடுத்திருக்கிறதே! அதில்தான் இந்த விசித்திரம் எல்லாம் இருக்கிறது. மற்றெல்லாத் தேசத்துக்கடவுளருக்கும் பெண்சாதிபிள்ளைகுடும்பம் இல்லை. பால், பாயாசம், வடை, பொங்கல் இல்லை. மற்ற தேசத்துக்கடவுள் எல்லாம் அதன்தன் இடத்தில் இருந்துகொண்டே அதனதன் வேலைகளைச் செய்யும். நம் கடவுள் அப்படியிருக்காது. தேவலோகத்தைவிட்டுப்பூலோகத்துக்குப் பெண்சாதியுடன் மனிதனாகவேவந்துவிடும். பெண்சாதியைப் பறிகொடுத்துவிடும். சின்னத்தலையும் பெரியதலையும் குய்யோமுறையோஎன்று கூப்பாடுபோட்டுச் சீரழியும். வந்தகடவுள்சின்னத்தலையையும் பெரியதலையையும் உண்டாக்கிவிட்டுச்செத்துவிடும். இந்த அதிகாரத்தைக் கடவுளிடமிருந்து எடுத்துவிடவேண்டும். அளவுக்கு மீறி ஆரியக்கடவுளைக் கொழுக்க வைத்துவிட்டோம். அந்தக்கொழுப்புக்குறையவேண்டும். அப்பொழுதான் தேசியத்தில்சின்னத்தலைஇருக்காது. அப்பொழுதுதான் நம்மை யாரும் சின்னத்தலைஎன்றுசொல்ல மாட்டார்கள்.

# கோபுரம் ஏறி கோழி மேய்ப்பானேன்?

## குப்பைமேடு போதுமே!!

### புராணம் பேசப் புலமை வேண்டுமா?

### பழமைபேசி நீறுபூசிக் கண்டபலன்

## பஞ்சம்! பட்டினி! பரிதாபம்!

**(பரதன்)**

சீனநாட்டுச் சர்க்கார் சீறினர் ஒருகாலத்தில், தமிழகத்துக்குத்தங்கள் நாட்டுச் செல்வம் போய்விடுகிறதேஎன்று. தமிழ்நாட்டவர், கடலில் கலம் செலுத்தி வாணிபம் நடத்திப் பெரும் பொருள் ஈட்டினர். அந்த வாணிபத்துறையினால், சீன நாட்டுச் செல்வம் குறைந்துவிடுவதாகக்கருதி, அந்நாட்டுச்சர்க்கார், தமது நாட்டவருக்குத்தடைவிதித்தனர், தமிழகத்தோடு வாணிபம்செய்வதை நிறுத்த. மேனாடுகள் எங்கும்சென்றதமிழர், அகிலையும்சந்தனத்தையும், முத்துப்பவளத்தையும், ஆடை வகைகளையும்விற்றனர், [illegible] குவித்தனர்! [illegible] கள், செல்வத்தில்புரண்டனர், மதக்குருமாராக ஆரியர் அமர்ந்தனர், ஆரிய மார்க்கத்தைப்புராணங்கள் புகுத்திவிட்டன, அரசனும் மக்களும் வாரி வாரி இறைத்தனர் பொன்னையும் [illegible]. குன்றெல்லாம் கோயில், மலைகளெல்லாம் குடையப்பட்டன, எங்கும் ஆலயம், ஆலயமெங்கணும் விலையுயர்ந்த நகைகள், விமரிசையான திருவிழாக்கள், இதன்பயனாக விளைந்தது என்ன? மக்கள் உழைத்து, மன்னனிடம்தர, மன்னன்மகேசனிடம்தருவதாக எண்ணிக்கொண்டு மறையோரிடம் தர, மறையோர் உண்டுகொழுத்து ஊராள்வோனையும் மிரட்டும் நிலை பெற்றனர். மன்னர்கள், வெளிநாட்டிலிருந்துவந்த, பாடுபடாதகூட்டத்தாருக்குத்தருவதாகவா எண்ணினர்? இல்லை! பக்திக்காகத் தருவதாக எண்ணினர்! தாம் செய்யும் தானதருமம், ஆலயப்பணி யாவும்பிரமாதமில்லை, இவை எம்மாத்திரம், இல்லையே என்னுதை இயற்பகை என்ன, விளையா விதையை எடுத்தளித்த இளையான்குடிமாறனென்ன, கண்ணையே அப்பிய வேடர்குலத்தவனென்ன, தனத்தையும்தன்னையுமே அளித்த அமர்நீதி என்ன, இவர் போன்றூர் பக்தியின் பொருட்டுச் செய்ததிலே பாவியேன் யான் பத்தாயிரத்தில் ஓர் பங்கும் செய்தேனில்லை, பரமனே, என்று எண்ணினர்—எண்ணவைத்தது பெரியபுராணம்.

பெரியபுராண காலத்துக் குப்பிறகு, 11, 12-வது நூற்றுண்டுகளிலும் அதற்குப்பிறகும், செல்வம் சீரழிந்தது, பாடுபடுவோர்பட்டினிகிடந்தனர், பாடுபடாத பார்ப்பனகுலம், நாடு ஆண்டவரை மிரட்டி நல்வாழ்வு வாழ்ந்தது. செல்வம் இருந்தும் சீரழிக்கப்பட்டு, உழைத்தும் பயன் காணுது குமுறும் மக்கள், வெளிநாடுகளிலேபுரட்சிசெய்திருப்பர்—இங்கோ, 'புண்ய'கைங்கரியம் செய்கிறுன் பூபதி, இதைக் குறைகூறுவதே பாபம், என்றுமக்கள் வாயடக்கிவாழ்ந்தனர், இதற்குப்பெரியபுராணம்மிகமிகப்பயன்பட்டது—மன்னரை மாற்றுன்முன் மண்டியிடச்செய்ய—மக்களை மதியிழக்கச்செய்ய! யாரார், ஆரியர் வாழ்வுக்கேற்றவிதமான ஆட்சி நடத்தினரோ அவரெல்லாம்புகழப்பட்டனர்—'இம் மன்னன் மனுதர்மத்தை அனுஷ்டிக்கிறுன்' என்று, வீரராஜேந்திரனை விப்பிரர் புகழ்ந்தனர் என்று செப்பேட்டில் செதுக்கப்பட்டிருக்கிறது. காணும் கல்வெட்டுகள், எதைக்காட்டுகின்றன, நமது காவலர்கள், மக்கள் உழைத்துத்தேடிய பொருளை எல்லாம், ஆரியருக்குக் காணிக்கையாகத் தந்து, கண்மூடிச் செயலற்றனர். கோயில் அமைப்பதும், அங்கு கொட்டுமுழக்கும் கூத்தாடுவோரும், குழலூதியும்அமைப்பது, திருப்பணிஎன்று பெரியபுராணம் தெரிவித்தது—அத்தகைய செயல் புரிந்தோர், பரமனின்அருள்பெற்றனர் என்று பாடல்கள் பாடப்பட்டன. எனவே மன்னர்கள், "கட்டு கோயிலை! வெட்டு திருக்குளம்! கொடு காணிக்கை! தானதருமங்களைத் தயங்காமல் செய்! சதுர்வேதி மங்கலங்களை ஏற்படுத்து" என்று உத்தரவிட்டனர். ஊரெங்கும் கோயில்! கோயிலெல்லாம், அந்தக்கும்பல்!! தாளச்சத்தம், மேளச்சத்தம்! மக்களின்பட்டினிக்குரலைமன்னர்காதில் விழவொட்டவில்லை.

போர்முறையிலே புல்லர் கையாளும் திட்டம்ஒன்றுண்டு, அதாவது எதிரி உபயோகிக்கும் நீர் நிலையங்களிலேநஞ்சுகலந்துவிடுவர், அங்கு நீர்பருகி எதிரிமாள்வர்; அதுபோல, பெரியபுராணம் முதலிய ஏடுகள், தமிழகத்திலே தூவிய எண்ணங்கள், தமிழர் வாழ்விலே நஞ்சுபுகுத்திவிட்டன; நசித்தது தமிழகம். தமிழ்நாட்டிலே "சதுர்வேதி மங்கலங்கள்" அமைத்தனரே, அதைவிட வேறுஎன்ன சான்று வேண்டும், தமிழரின் செல்வம் ஆரியருக்குக் கொட்டி அழப்பட்டது என்பதை விளக்க.

மன்னர்கள் 'வரி' கேட்பதிலோ, குறைவு கிடையாது. கடமை, குடிமை என்று இருவகை வரி; கடமை அரசகாரியத்துச் செலவுக்காக, அஃதே அனைவரும் புகழும் ஆறிலொரு கடமை என்பது. குடிமை என்பது பலர் தெரிந்து கொள்ளாதது; அது ஆலய காரியத்துக்கும் ஆரியசேவைக்குமான செலவுக்கென்று மன்னர் திரட்டியது. நிலத்துடன் நின்றுவிடவில்லை வரி; தொழிலுக்கு உண்டு; பொருளுக்கு உண்டு—சுங்கவரி இருந்தது.

எரிமீன்காசு—மீன்பிடிப்போர்
இடைப்பட்டம்—ஆடுமேய்ப்போருக்கு
இடங்கை வரி—இடங்கை தொழிலாளருக்கு
கடை வரி—வியாபாரிக்கு
[illegible]
ஓடைக்குழி—ஓடம் விடுவோருக்கு
செக்குக் கடமை—வாணியருக்கு
வண்ணார்பறை—வண்ணாருக்கு
விற்பிடி—வேடருக்கு

என்ற முறையிலே தொழில்வரிகள் வசூலிக்கப்பட்டன. இரும்பு, கள், உப்பு, ஆகியவற்றுக்கு வரி. பொருளை ஏற்றுமதி செய்தால்வரி, இறக்குமதிக்கு வரி, ஸ்தலதாயம், மார்க்கதாயம், மாமூல தாயம் என்ற வரி வகைகள். இவ்வளவுவரியும் கிடைத்தபோது வாட்டமேது மன்னனுக்கு! வாணிபர்கள் ஈட்டிய பொருளைக் குவித்த பிறகு, வறுமை ஏது நாட்டிலே! ஆனால் வளமான இந்நாட்டிலே சலியாத உழைப்பால் மக்கள் சேகரித்த செல்வமெல்லாம், எப்படிப்பாழாயின என்பதைச் செப்பேடுகளும், சிலாசாசனங்களும், கல்வெட்டுகளும் தெரிவிக்கின்றன.

பெரியபுராணம், பரவிய நாட்டிலே, சிவனருளும் சேர்ந்து பரவிற்றே? பஞ்சம் பரவிற்று! ஏன் பரவாது? கிடைக்கும் பொருளெல்லாம், சதுர்வேதி மங்கலத்தாருக்குச் செலவாகிவிடவே, மக்கள்பஞ்சத்தால்வாடலாயினர். பெரியபுராணத்தைப் படித்துப் பயன் காணவில்லை! தொண்டர் பெருமையை உணர்ந்து, ஊர்சுகப்படவில்லை! தமிழகத்திலே பஞ்சம் தலைவிரித்தாடிற்று! செல்வம் கொழித்த தமிழகத்திலே, பட்டினிக்குரல்! பல, வங்கப்பஞ்சங்கள்! தங்கச் சிலைகள் கோயிலிலே! வைரமுடிகள் அவைதம்சிரங்களிலே! சிங்கத்தமிழர்செத்துவீழ்ந்தனர் பாதையிலே, பஞ்சத்தால்! சாந்தத்தையும் சீலத்தையும் பக்தியையும் உண்டாக்கிய ஏடன்றோஎன்று கொண்டாடுகிறூர்கள் பெரியபுராணத்தை. ஆனால், அதைநாட்டிலேபரப்பி, மக்களையும் மன்னரையும் நீறுபூசிகளாக்கிய பிறகு, நாடு செழித்ததோ, வளம் வளர்ந்ததோ? இல்லை! கிடைத்ததை எல்லாம், ஆலயத்திருப் பணிக்கும், அம்மையப்பன் திருவிழாவுக்கும் செலவிட்டு, மக்கள் ஓய்ந்தனர்! பஞ்சமும் வந்துற்றது, அதுபோது சாய்ந்தனர்—சிவலோகம் சென்றனர், சோற்றுக்கில்லாதார் தொகை தொகையாக!

**பஞ்சம்**

1054—ஆலங்குடி தஞ்சை மாவட்டம்
1116-1119—தக்ஷிணம்
1124—திருவத்தூர்
1160—திருக்கடையூர், தஞ்சை
1201—திருப்பாம்பரம் "
1241—திருமங்கலக்குடி "
1241—நந்தலூர், கடப்பை.
1390-1—திருப்பனங்காடு, வடாற்காடு.
1391—திருக்களார், தஞ்சை.
1509—கன்கனஹல்லி, பெங்களூர்.

என்ற முறையிலே, இந்தத்தமிழகத்திலேபஞ்சம் தலைவிரித்தாடிற்று. பஞ்சாட்சரம் ஜெபித்துக்கொண்டு இருந்தமக்கள் இந்தப்பஞ்சங்களைத் தானுபரமனிட மிருந்து பரிசுகளாகப்பெறவேண்டும்! பக்திப்பிரபாவத்தின் விளைவுஇதுவாகவா இருக்க வேண்டும்! சைவம் தழைத்தது" தொண்டர் பெருமையைச் சேக்கிழார் செந்தமிழில் எடுத்துக் கூறியதால் என்று பூரிப்படையும் அன்பர்கள், இத்தனை பஞ்சங்களும், 11-வது நூற்றுண்டிலே பக்திப்பரவசத்திலே பொருளைப் பாழாக்கத் தொடங்கிய தமிழகம் 11-லிருந்து 15-வது நூற்றுண்டு வரையிலே, பஞ்சத்தில் சிக்கித்தவித்ததை, திருஅருளின் மாட்சிமையிலே ஒன்றுகக்கொள்வரோ!

சேக்கிழார் குறிப்பிடும் தலங்களிலே பெரும்பகுதி தஞ்சைமாவட்டமாக இன்றுள்ள சோழவளநாட்டிலே உள்ளன. இவரும்சோழனிடமே மந்திரி. சோழநாடு சோறுடைத்து என்பது முதுமொழி, அந்நாடு, பஞ்சத்தால் நலிவதா? பணம் குவியாமலா இருந்தது? பணம் ஏராளம்! அவை கோயில்களிலே குவிந்துகிடந்தன. பார்போசா என்னும் வரலாற்று ஏட்டாசிரியர் கூறுகிறூர், "மாலிக் காபூர் என்ற இஸ்லாமியவீரன் தென்பகுதியிலே வெற்றிகள் பல பெற்றுத் திரும்பும்போது 1310ல் 96,000"

(6-ம் பக்கம் பார்க்க)




**வளமார் எமது திராவிடநாடு வாழ்க, வாழ்கவே!**

Edited Printed and Published by C. N. Annadurai M.A., at "Dravida Nadu" Press, 317—319 Hodgsonpet, Conjeeveram.